உள்ளடக்கம்

03 தவிசாளரின் மீளாய்வு

05 பணிப்பாளர் சபையின் மீளாய்வு

06 ஆலோசனைக் குழுவின் மீளாய்வு

07 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் மீளாய்வு

08 பணிப்பாளஉ சபையின் ஒழுங்கமைப்பு

09 ஆலோசனைக் குழுவின் ஒழுங்கமைப்பு

10 நகரக் குழயிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதான அலுவலஉ குழு

13 பௌதீக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

14 வீடமைப்புக் கருத்திட்டங்களை வரிசைப்படுத்தல் மற்றும் முன்னேற்றம

20 நகரக் குழயிருப்பு மற்றும் நடுத்தர வருமானம் பெறும் சமுதாயத்தினருக்கான வீடமைப்புக் கருத்திட்டங்களை அமுல்படுத்த உகந்த காணிகளை இனங்காணல

31 மனிதவள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

48 2021 உலகக் குழயிருப்புத் தினக் கொண்டாட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

50 நகரக் குழயிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையில் உள்ளக நிதியமொன்றை தாபித்தல்

53 மனிதவள அபிவிருத்தி மற்றும் நிறுவன முகாமைத்துவ அபிவிருத்தி நடவழக்கைகள்

57 அதிகாரசபைக்கு புதிய அறவீட்டுப் பிரிவை ஏற்படுத்தல்

59 அதிகாரசபைக்கு புதிய போக்குவரத்து மற்றும் பராமரிப்புப் பிரிவை ஏற்படுத்தல்

60 அதிகாரசபைக்கு புதிய தகவல் தொழில்நுட்ப மற்றும் ஊடகப் பிரிவை ஏற்படுத்தல்

61 மாதாந்த தர்மப் போதனை நிகழ்ச்சித்திட்டம்

65 நிதி அறிக்கைகள்

91 அரசின் தனிக்கை அறிக்கை



நோக்கு

"பெருமைமிகு வாழ்க்கையொன்றுக்கான நிலைபேறான நகரக் குடியிருப்புகளைக் கட்டியெழுப்புதல்"

செயற்பணி

"ஆரோக்கியமான, ஒருங்கிணைந்த மற்றும் பாதுகாப்பான நகரக் குடியிருப்புக்களைக் கட்டியெழுப்புதல் மற்றும் பௌதீக, சமூக மற்றும் பொருளாதார ரீதியில் சமுதாயங்களை வலுவூட்டல்"

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் குறிக்கோள்கள்

- ஒவ்வொரு நகர்ப்புறப் பிரதேசத்திற்கும் திட்டமிடப்பட்ட ஒருங்கிணைந்த நகரக் குடியிருப்புக்களை ஏற்படுத்தல்.
- நகர்ப்புற சமுதாயத்தினர்களின் பொருளாதார, சமூக அபிவிருத்தியை மேம்படுத்தல்.
- நகர்ப்புற சமுதாயத்தினர் மத்தியில் ஆதனங்களின் உரித்துப் பற்றிய உணர்வை ஏற்படுத்தல்.
- அதிகாரசபையின் செயலாற்றுகையை மிகச் சிறந்த மட்டத்திற்கு கொண்டுவருதல்.
- சுயநிதியைக் கொண்ட நிறுவனமொன்றாதல்.



தவிசாளரின் மீளாய்வு

எம்.எல். சம்பத் சுபசிங்கஆரச்சி
தவிசாளர்
நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை

நகர்ப்புறப் பிரதேசங்களில் வாழும் குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அவர்களின் வீடு உள்ளிட்ட பௌதீக சூழல், முழுமையான நகர மற்றும் குடியிருப்பு அபிவிருத்திக்கான திட்டத்திற்கு அமைவாக குறித்த சமுதாயத்தினரின் வீடமைப்புச் சிக்கல்களைத் தீர்த்துவைத்தல் மற்றும் அவர்களை சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியில் வலுவூட்டுவது நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் முக்கிய நோக்கமாகும்.

அதற்கமைய, 2021 ஆம் ஆண்டிலும் பல வெற்றிகளை அடைந்துகொள்ள எமக்கு முடிந்தமை மிக்க மகிழ்ச்சியளிக்கின்றது. நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு சிக்கலொன்றாகக் காணப்பட்ட அதன் நிதி பற்றிய சட்டரீதியான நிலைமையை திறைசேரி மற்றும்சட்டவரைஞர் திணைக்களத்தின் மூலம் தீர்த்துக் கொள்ள முடிந்தமை நாம் பெற்ற பாரிய வெற்றியொன்றாகும்.

மேற்படி நிதியத்தின் மூலம் நிறுவனத்தை ஒரு பக்கத்தில் வலுவூட்டல் மற்றும் மறுபுறம் நிறுவனம் பொதுத் திறைசேரியில் தங்கியிருக்காத சுயாதீன நிறுவனமாக மாற்றியமைப்பது எமது எதிர்கால இலக்காகும் என்பதுடன், மேற்படி இலக்கை அடைந்துகொள்வதற்காக எமது பதவியணியினர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை எதிர்கொண்ட மிகப்பெரும் சிக்கலாக இருப்பது காணிகள் இல்லாமையாகும். இந்த நிலைமையை நல்ல முறையில் புரிந்துகொண்டு, தபால் திணைக்களத்துடன் கலந்துரையாடி குறைப் பயன்பாட்டு தபால் அலுவலக வளவுகளுக்கு கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களை ஏற்படுத்துவதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள முடிந்தமை நாம் பெற்ற மற்றொரு முக்கிய வெற்றியாகும்.

மேலும் அதற்கமைய திறைசேரிக்கு செலவுச் சுமையாக இருக்காது அரச தனியார் தொழில்முயற்சியின் கீழ் நடுத்தர வகுப்பினருக்கான வீடமைப்புக் கருத்திட்டங்களை ஆரம்பிப்பது எமது எதிர்பார்ப்பாக இருந்ததுடன், அதற்கமைய செயற்பட்டு வத்தளை வெலிசரவில் 408 வீட்டு அலகுகளைக் கொண்ட வீடமைப்புக் கருத்திட்டத்தை நிர்மாணிப்பதை ஆரம்பிக்கும் ஆரம்ப கட்டப் பணிகளை 2021 ஆம் ஆண்டில் முன்னெடுக்க எமக்கு வாய்ப்புக் கிடைத்தமை மிகப்பெரும் வெற்றியாகும்.

புதிய கருத்திட்டங்களுக்கு இனங்காணப்பட்ட காணிகளில் அடுத்தகட்டப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே தபால் அலுவலக வளவின் காணி
- கடுவெல தபால் அலுவலக வளவின் காணி
- நிட்டம்புவ ஒசர்ட்வத்த வீடமைப்புக் கருத்திட்டம்
- அத்துருகிரிய சதாசிரிபுர காணி

இதற்கு மேலதிகமாக திறைசேரியின் ஏற்பாடுகளின் கீழ் குறைந்த

வருமானம் பெறும் குடும்பங்களுக்கு ஹிக்கடுவ துடுவேகொடயில் 32 வீட்டு அலகுகள் மற்றும் நாவலப்பிட்டியவில் 83 வீட்டு அலகுகளுக்கு வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஏற்பாடுகள் இந்த ஆண்டுக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இந்த வெற்றிகளுக்கு மேலதிகமாக, இந்த நிறுவனம் ஆரம்பம் முதல் மேற்கொள்ள முடியாதிருந்த பதவியணியை தரப்படுத்துவதை நிறைவு செய்ததன் மூலம் அவர்களுக்கு திருப்திகரமான மனநிலையுடன் நிறுவனத்தில் கடமையாற்றுவதற்கான சூழலை உருவாக்க முடிந்தமையும் மகிழ்ச்சியளிக்கின்றது.

அத்துடன் காலாண்டு அடிப்படையில் ஊழியர்களை மதிப்பீடு செய்வதை ஆரம்பித்து மனிதவள அபிவிருத்தி விடயத்தில் நல்லதொரு செயலாற்றுகையை ஏற்படுத்தத் தேவையான சூழல் உருவாக்கப்பட்டது. நிறுவனத்தில் நிலவிய மனிதவள வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2021 ஆம் ஆண்டு வாய்ப்புக் கிடைத்ததுடன், அதன் மூலம் மக்களுக்கு வினைத்திறன்மிக்க சேவையை ஆற்றும் செயன்முறையை துரிதப்படுத்தும் ஆற்றல் கிடைத்தமையும் நாம் பெற்ற பேறாகும்.

பதவியியின் ஆன்மீக வளர்ச்சிக்காக ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்துக்கு முன்னைய தினம் சங்கைக்குரிய பிக்குமாரின் பங்கேற்புடன் தர்மப் போதனை நிகழ்ச்சியும் ஒழுங்கு செய்யப்படுவதுடன், அதன் மூலம் பெரும்பாலான பதவியணி உறுப்பினர்களுக்கு மனஒருமைப்பாடு மற்றும் மனஅமைதியுடன் ஆன்மீக அபிவிருத்தியும் ஏற்படுவதன் மூலம் மக்கள் சேவையில் கூடுதல் ஊக்கம் ஏற்படுவது அவதானிப்புச் செய்யப்படுவதையும் நாம் பெற்ற பாக்கியமாகக் கருதுகின்றேன்.

அத்துடன் எல்லாச் சந்தர்ப்பத்திலும் பதவியணிக்கு உதவியாக அமைகின்ற அறிவை வளர்க்கும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அடிக்கடி வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் கொவிட் நிலைமையில் நிலவிய தடைகளுக்கு மத்தியிலாயினும் யாதாயினும் அளவுக்கு அந்நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்தது என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இளைஞர், யுவதிகளுக்கான மொழி அறிவு மற்றும் மென் திறன் விருத்திக்கான விசேட நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிட ஆற்றல் கிடைத்தமை இந்த ஆண்டில் எம்மிடம் பொறுப்பளிக்கப்பட்ட மற்றொரு பொறுப்பாகும்.

கௌரவ இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாலக கொடஹேவா அவர்களின் பெருமைமிகு எண்ணக்கருவுக்கு அமைய இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஊக்குவிக்கும் செயற்பணியொன்று 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதுடன், மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தை நாடளாவிய ரீதியில் அமுல்படுத்த தற்போது சகல பணிகளும் ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்திக் கைத்தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்கு இந்த ஆண்டில் ஏப்ரல் மற்றும் டிசம்பர் மாதங்களில் 02 வர்த்தகக் கண்காட்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டதுடன், மேற்படி தொழில்முயற்சியாளர்களுக்கு உதவும் வகையில் சுயதொழில் கடன் உதவிகளைப் பெற்றுக் கொடுக்கவும் நாம் நடவடிக்கை எடுத்தோம்.

குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்திகளை மேற்கொள்ளும் தொழில்முயற்சியாளர்களை ஊக்குவித்து அவர்களுக்கு ஏற்றுமதி சந்தை மற்றும் உள்நாட்டு சந்தையை திறந்துகொடுப்பதற்காக பலம்சேர்க்கவும் நாம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதுடன், சுயதொழில் என்ற வகையில் செயற்பட்டுவரும் இவ்வாறான தொழில்முயற்சியாளர்களுக்கு கடன் உதவி வழங்குவதற்காக எம்முடன் மக்கள் வங்கி இந்த ஆண்டில் உடன்படிக்கை செய்துகொண்டதையும் நினைவுகூர்கின்றேன்.

இதற்கு மேலதிகமாக,

- சௌபாக்ய பிரஜா சக்தி
- சௌபாக்ய திரிபல
- சௌபாக்ய நெனபல
- சௌபாக்ய திவிவருன

ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக 16 மாவட்டங்களில் 27 குடியிருப்புக்களில் வாழும் பிள்ளைகள், பெற்றோர், இளைஞர், யுவதிகள், சிரேஷ்ட பிரசைகள், போதைவஸ்துக்களுக்கு அடிமையானவர்கள் ஆகிய சகலருக்குமான பல நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த முடியுமாயிற்று.

கொவிட் தொற்று நிலைமைக்கு மத்தியில் அமுலில் இருந்த தனிமைப்படுத்தல் நிலைமை காரணமாக 2021 ஆம் ஆண்டில் ஒரு நாள்கூட அலுவலகத்தை மூடிவைக்கப்படவில்லை என்பதை விசேடமாகக் குறிப்பிட வேண்டும்.

ஒழுக்கமிக்க பதவியணியினருடன் இலஞ்சம் மற்றும் ஊழல் அற்ற நிலையில் இயங்கிவருகின்ற அரச நிறுவனமாக நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையை மாற்றியமைத்து தொடர்ந்தும் மக்களுக்கு வரிச் சுமையாக அமையாது சுய நிதியைக் கொண்டதொரு நிறுவனமாக மாற்றிக் கொள்ளும் எமது ஒரே நோக்கத்தை அடைந்துகொள்வதற்கு சகலரும் ஒற்றுமையுடனும், ஏகமனதாகவும் செயற்பட்டு வருகின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.



பணிப்பாளர் சபையின் மீளாய்வு

பணிப்பாளர் நாயகம்

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை.
பணிப்பாளர் சபையின் கட்டளைக்கு அமைய,
பணிப்பாளர் சபையின் செயலாளர்,

மீளாய்வு ஆண்டில் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் 07 நடாத்தப்பட்டுள்ளன. பணிப்பாளர் சபையின் உபகுழுவாக செயற்பட்டு வருகின்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு 2021 ஆம் ஆண்டில் 03 கூட்டங்களை நடாத்தியுள்ளது.

பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களான கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்பாளர்கள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அங்கத்தவர்களாக செயற்பட்டு வருகின்றனர்.

திரு சமன் ஜயசிங்க - உறுப்பினர்
திருமதி ஈ.எம்.என். எதிரிசிங்க - உறுப்பினர்
திருமதி எவ்.என். சமானா சனூஸ் - உறுப்பினர்

நகரக் குடியிருப்புகளில் வாழும் மக்களின் வீடமைப்புச் சிக்கல்களுக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுத்தல் மற்றும் அவர்களை சமூக, பொருளாதார மற்றும் பொருளாதார ரீதியில் வலுவூட்டுவது நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் முக்கிய நோக்கமாகும். அதற்காக பௌதீக மற்றும் மனித அபிவிருத்தி ஆகிய இருவித அணுகுமுறைகளின் கீழ் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும், கருத்திட்டங்களும் அமுல்படுத்தப்படுகின்றன.

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 12வது மற்றும் 13.6வது பிரிவுகளுக்கு அமைய, நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுகின்ற சகல கொடுக்கல் வாங்கல்களையும் முறையாக கணக்குகளில் பதிவு செய்து கணக்குப் பதிவேடுகளை பேணிவருவதை உறுதிப்படுத்தும் பொறுப்பு மற்றும் அதிகாரசபையின் கணக்கு நடவடிக்கைகள் மற்றும் குறித்த ஆண்டுக்கான மிகை / குறை பற்றிய உண்மையான மற்றும் நியாயமான கருத்தை பெற்றுக்கொடுக்கின்ற நிதிக்கூற்றுக்களை தயார்செய்ய வேண்டிய பொறுப்பு அதிகார சபைக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, முறையாக கணக்கு பதிவேடுகளைப் பேணிவருமாறும், நாளாந்தம் நடாத்தப்படுகின்ற கூட்டங்கள் மற்றும் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் ஊடாக நிதி அறிக்கையிடல் முறையியலை மீளாய்வு செய்யுமாறும் பணிப்பாளர் சபை, அதிகாரசபைக்கு கட்டளையிட்டுள்ளது.

இந்த ஆண்டறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயார்செய்யும் போது, ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் ஏற்புடையவாறு உரிய கணக்கீட்டு தராதரமங்களை ஏற்புடையதாக்கிக் கொள்வதற்கும், நியாயமாக மற்றும் அறிவுப்பூர்வமான தீர்மானங்கள் மற்றும் மதிப்பீடுகளின் மூலம் உறுதிப்படுத்திக்கொள்வதற்கும் பணிப்பாளர் சபை கவனம் செலுத்தியுள்ளது. அதிகாரசபைக்கு உரித்தான சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும், மோசடி மற்றும் ஏனைய முறைகேடுகளை கண்டறிதல் மற்றும் அவற்றைத் தடுத்துக்கொள்வதற்கும் பணிப்பாளர் சபை நடைமுறையில் தாம் மேற்கொள்ளக்கூடிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பில் செயற்படும் போது பணிப்பாளர் சபையினால் அதிகாரசபையின் சொத்துக்களை பாதுகாத்துக் கொள்வதற்கும், அதன் அறிக்கைகள் பற்றிய உண்மைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை நடைமுறைக்கு சாத்தியமானவாறு முடிந்தளவுக்கு பாதுகாத்துக்கொள்ளக்கூடிய வகையில் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் சேவைகளை முறையாகவும் நிறைவேற்றத் தேவையான உள்ளக பரிசீலனைகள், உள்ளக கணக்காய்வு, நிதி மற்றும் ஏனைய கட்டுப்பாடுகளைக் கொண்ட விளைதிறனும் பூரணத்துவமும்மிக்க உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தாபிக்கப்பட்டுள்ளது.

ஆலோசனைக் குழுவின் மீளாய்வு



2008 இன் 36 ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 10 ஆம் பிரிவுக்கு அமைய ஆலோசனைக் குழு தாபிக்கப்பட்டுள்ளது. போதியளவில் பால்நிலைசார் பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ளதை உறுதி செய்து ஆலோசனைக் குழுவானது தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் 14 பேருக்கு மேற்படாதவாறு ஆலோசனைக் குழு அமைந்திருக்க வேண்டும் என்று நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆலோசனைக் குழுவின் பதவிக் காலமாக நியமனம் செய்யப்படுகின்ற திகதி முதல் 03 வருட பதவிக் காலம் இருத்தல் வேண்டும். ஆலோசனைக் குழுவுக்கு நியமனம் செய்யப்படுகின்ற உறுப்பினர்களில் ஒருவர் தவிசாளராக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் நியமனம் செய்யப்பட வேண்டும். இதற்கமைய 2021 ஆம் ஆண்டு முதல் ஆலோசனைக் குழுவின் தவிசாளராக பேராசிரியர் திரு ரங்கிக ஹல்வத்துர செயற்பட்டு வருகின்றார்.

நிலைபேறான நகரக் குடியிருப்பு அபிவிருத்தியை உறுதி செய்வதற்காக நகரக் குடியிருப்பு அபிவிருத்தி தொடர்பிலான தேசிய கொள்கையை தயார் செய்வதை ஆலோசனைக் குழுவின் முக்கிய பணியாகக் குறிப்பிட முடியும் என்பதுடன், இதற்கு மேலதிகமாக, நகரக் குடியிருப்புக்களில் வாழும் மக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ள பிரேரணைகளைக் கவனத்தில் கொண்டு நகரக் குடியிருப்புக்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை கட்டியெழுப்புவதற்காக நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை தயார் செய்யும் திட்டங்கள், கருத்திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்களை தயார் செய்வதற்கு அதிகாரசபை ஆலோசனை கோரும் போது ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுப்பதையும் விசேட செயற்பணியாகக் குறிப்பிட முடியும்.



கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் மீளாய்வு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கட்டளைக்கு அமைய,
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் செயலாளர்,

பணிப்பாளர் நாயகம்
நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை.

நல்லதொரு நிதி அறிக்கையிடல் முறைமை காணப்படுவதை உறுதி செய்வதற்கு மற்றும் முகாமைத்துவம் செய்வதற்கு மற்றும் உரிய அலுவலர்களுக்கு சரியான, பொருத்தமான மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களைப் பெற்றுக் கொடுக்கக்கூடியவாறு, அதனை நல்ல முறையில் முகாமைத்துவம் செய்வதை உறுதி செய்வதற்கும், சட்டங்கள் மற்றும் அதிகாரசபையின் கொள்கைகள் மற்றும் நியாயாதிக்க மற்றும் கூட்டிணைக்கப்பட்ட நிருவாகங்களுக்கு உட்பட்டதாகவும் கணக்கீட்டு மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டை முகாமைத்துவம் செய்வதற்கும், மீளாய்வு செய்யும் அதிகாரங்களை கணக்காய்வுக் குழுவிடம் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபைக்கான திறைசேரியின் பிரதிநிதி மற்றும் ஏனைய பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் இரண்டு பேரை (02) உள்ளடக்கியதாக கணக்காய்வுக் குழு காணப்பட்டது. 01/2021 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் அரசாங்க தொழில்முயற்சிகள் வழிகாட்டல்களுக்கு அமைய பணிப்பாளர் சபைக்கான திறைசேரியின் பிரதிநிதியும், திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளருமான திரு டி.பி. விமலசேன குழுவின் தவிசாளராக செயற்பட்டார். திருமதி கே.ஏ.எஸ். வல்பொல மற்றும் சட்டத்தரணி திருமதி எவ்.என். சமானா சனூஸ் ஆகியோர் குழுவின் உறுப்பினர்களாக செயற்பட்டார்கள். சபையின்

2021.11.26 ஆம் திகதி நடைபெற்ற 06/2021 பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பணிப்பாளர் சபைக் குறிப்பு இலக்க 06/2021/C-14 இற்கமைய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்களாக அரச தொழில்முயற்சிகள் வழிகாட்டல்களுக்கு அமைய அரச தொழில்முயற்சிகள் வழிகாட்டல்களுக்கு அமைய பணிப்பாளர் சபைக்கான திறைசேரியின் பிரதிநிதி மற்றும் மேலதிக பணிப்பாளர் நாயகம் - அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களம், திரு சமன் ஜயசிங்க குழுவின் தவிசாளராகவும், ஏனைய பணிப்பாளர் சபை உறுப்பினர்களான திருமதி ஈ.எம்.என். எதிரிசிங்க மற்றும் சட்டத்தரணி திருமதி எவ்.என். சமானா சனூஸ் ஆகியோர் குழுவின் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட்டார்கள். அதற்கமைய 2021.12.01 ஆம் திகதி நடைபெற்ற 02/2021 மற்றும் 2021.12.28 ஆம் திகதி நடைபெற்ற 03/2021 ஆம் குழுக் கூட்டங்களின் போது மேற்படி அலுவலர்கள் குழு உறுப்பினர்களாக செயற்பட்டார்கள்.

அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர் மற்றும் நேர்வரிசை அமைச்சின் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் ஆகியோர் அவதானிப்பாளர்களாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் பங்கேற்றார்கள் என்பதுடன், தேவையானவாறு நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பிரிவுத் தலைவர்கள் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் ஏனைய அலுவலர்களும் கூட்டங்களில் பங்கேற்றார்கள். அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் இக்குழுவின் செயலாளராக செயற்பட்டார். உள்ளகக் கணக்காய்வாளரினால் தயார் செய்யப்பட்ட 2021 ஆம் ஆண்டுக்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தினை குழு ஆராய்ந்து சிபாரிசு செய்தது. கணக்காய்வு அறிக்கைகள், கணக்காய்வு வினாக்கள் தொடர்பிலான சிக்கல்கள் மற்றும் விடைகள், உள்ளக மற்றும் வெளிப்புற கணக்காய்வு அவதானிப்புக்கள், உள்ளகக் கட்டுப்பாட்டுக் கட்டமைப்புக்கள் மற்றும் ஆண்டறிக்கைகளை உரிய காலத்திற்குள் தயார் செய்து சமர்ப்பிப்பதன் அவசியத்தன்மை பற்றி விசேட கவனம் செலுத்துவதும் உள்ளடங்களாக மேம்படுத்தல்கள் மற்றும் தேவையான ஏனைய துறைகள் பற்றியும் குழுவின் கலந்துரையாடப்பட்டது. அதற்கமைய, தேவையான சீராக்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் பின்னாய்வு நடவடிக்கைகளும் கலந்துரையாடப்பட்டன.

கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்களை உள்ளடக்கிய கூட்டக் குறிப்புக்கள் பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டன. உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் வழங்கிய பெறுமதிமிக்க பங்களிப்பு மற்றும் குறிப்பாக கணக்காய்வுச் செயன்முறையின் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வழங்கப்பட்ட மிகப்பெறுமதிமிக்க அவதானிப்புக்களையும் இங்கு உயர்வாக மதிக்கின்றேன்.

பணிப்பாளர் சபையின் ஒழுங்கமைப்பு

2021.12.31 ஆம் திகதியில் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் சபை பின்வருமாறாகும்.



திரு எம்.எல். சம்பத் சுபசிங்கஆரச்சி
தவிசாளர், நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை



திரு உதய நாணாயக்கார
பணிப்பாளர் சபை செயலாளர்



திரு ஆர் துமிந்த சில்வா
பணிப்பாளர் சபை உறுப்பினர்



திருமதி எவ்.என். சமானா சனூஸ்
பணிப்பாளர் சபை உறுப்பினர்



திரு பி.டபிள்யு. லீலாரத்ன,
பணிப்பாளர் சபை உறுப்பினர்



திரு பீ.ஜீ.எஸ். மஞ்ஜுல
பணிப்பாளர் சபை உறுப்பினர்



திரு டபிள்யு.ஏ. உதித்த புப்ப குமார
பணிப்பாளர் சபை உறுப்பினர்



சட்டத்தரணி திரு சந்திம தீபிக பனாகொட
பணிப்பாளர் சபை உறுப்பினர்



திருமதி ஈ.எம்.என். எதிரிசிங்ஹ
பணிப்பாளர் சபை உறுப்பினர்



திரு அஜித் வசந்த ஜயலால்
பணிப்பாளர் சபை உறுப்பினர்



திரு சமன் ஜயசிங்ஹ
பணிப்பாளர் சபை உறுப்பினர் திரு பி.ஜி. ஜயதிலக்க உறுப்பினர்

ஆலோசனைக் குழுவின் ஒழுங்கமைப்பு

2021.12.31 ஆம் திகதியில் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் ஆலோசனைக் குழு பின்வருமாறாகும்.



பேராசிரியர் திரு ரங்கிக ஹல்வத்துர
தவிசாளர்



திரு எச்.பி.வீ. தர்மேந்திர
உறுப்பினர்



திரு காளிங்க திலகரத்ன
உறுப்பினர்



திரு என்.டி. ருவன் குமார
உறுப்பினர்



திரு ஜயந்த குமார
அதபத்து உறுப்பினர்



திரு ஜே.பி. எல்லேபொல
உறுப்பினர்



திரு ஆர்.ஏ.எஸ்.கே.
குலரத்ன - உறுப்பினர்



திரு ஆர்.ஜி.சி.பீ. ரனதுங்க
உறுப்பினர்



திரு ஆர்.ஜி.ஜி.தினேஷ்
உறுப்பினர்



திருமதி ஆர்.பி.சில்வா
உறுப்பினர்



திரு பி.ஜி. ஜயதிலக்க
உறுப்பினர்



திரு பிரியந்த ரத்நாயக்க
உறுப்பினர்



திரு கே. அனில்
விக்ரமசிங்க உறுப்பினர்



திரு கே.எம்.டி.கே.
கருணாதாசஉறுப்பினர்



திரு ஜி.ஏ.எல்.என்.
அபேவிக்ரம உறுப்பினர்

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதான அலுவலர் குழு



திரு எம்.எல். சம்பத் சுபசிங்கஆரச்சி
தவிசாளர்



திரு வி.யு.பி. நாணாயக்கார
பணிப்பாளர் நாயகம் (2021.07.12



பிரசன்ன ஜே. விக்ரமசூரிய
பணிப்பாளர் நாயகம் (2021.12.30)



திருமதி கே.கே.டபிள்யு.பீ.டி சில்வா
பணிப்பாளர் (திட்டமிடல்
மற்றும் கண்.)



திருமதி ஏ.ஜி.எஸ்.என். நிஷாந்தி
பணிப்பாளர் (நிதி)



திருமதி பீ.எம்.ஏ. வீரக்கொடி
பணிப்பாளர் (சமூக திரட்டல்)



திரு நலீன் கன்கந்த
பணிப்பாளர் (பொறியியல்)



திரு சுரங்க முனசிங்க
பதில் பணிப்பாளர் (பொறியியல்)
உதவிப் பணிப்பாளர் (தகவல்
தொழில்நுட்பம் மற்றும் ஊடகம்)



திருமதி டீ.ஏ. தேவிகா திசாநாயக்க
பிரதிப் பணிப்பாளர் (சட்டம்)



திரு எல்.ஆர்.ஏ. சாந்த
பிரதிப் பணிப்பாளர் (உள்ளகக்
கணக்காய்வு)



திரு. ஏ.எம்.கே.பி. அதாவுத
பிரதிப் பணிப்பாளர் (நிதி)
(கடன் அறவீடு போக்குவரத்து மற்றும்
பராமரிப்பு)



திரு ஏ.பீ.ஆர். ஞானப்பிரிய
பிரதிப் பணிப்பாளர் (மனிதவள
அபிவிருத்தி)

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதான அலுவலர் குழு



திரு. ஆர்.டி. சுசந்த பெர்ணாந்து
பிரதிப் பணிப்பாளர் (பெறுகை
மற்றும் சந்தைப்படுத்தல்)



திருமதி டபிள்யு.பீ. உதானி பெரேரா
பிரதிப் பணிப்பாளர் (காணி மற்றும்
கொத்து முகாமைத்துவம்)
(2021.07.12 வரை)



செல்வி அனுஷா ராஜபக்ஷ



செல்வி கே.ஜீ. அனுதாரா காஞ்சனீ
உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி
மற்றும் அபிவிருத்தி)
(2021.07.12 வரை)



திருமதி எம். புஷ்பா
உதவிப் பணிப்பாளர் (சமூக
திரட்டல்)



திரு ஆர்.ஏ. சுசந்த உதவிப் பணி-
ப்பாளர் (சமூக திரட்டல்)



திருமதி கே.ஐ. தர்ஷனீ
உதவிப் பணிப்பாளர்
(சமூக திரட்டல்)




திரு ஏ.எல்.ஹர்ஷ திலங்கர
பதில் உதவிப் பணிப்பாளர் (காணி
மற்றும் சொத்து முகாமைத்துவம்)
(2021.12.29 முதல்)



திருமதி ஜயாத்ரி ஆரியதிலக்க
பதில் பணிப்பாளர் (ஆராய்ச்சி
மற்றும் அபிவிருத்தி) (2021.12.30
முதல்) (2021.12.30

நகர்ப்புற குடியேற்ற அபிவிருத்தி அதிகார சபை
2021 நிறுவன அமைப்பு



பௌதீக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்



வீடமைப்புக் கருத்திட்டங்களை வரிசைப்படுத்தல் மற்றும் முன்னேற்றம

மன்மைதங்கிய சனாதிபதியின் "நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்திற்கு அமைய சகல குடும்பங்களுக்கும் வசதியானதொரு வீட்டுக்காப பிரவேசத்தைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்தை பிரதானமாகக் கொண்டு, குறைந்த வருமானம் பெறுகின்ற மற்றும் கீழ் நடுத்தரமட்ட வருமானம் பெறும் குடும் பங்களுக்கு நகர்ப்புறப் பிரதேசங்களை மையமாகக் கொண்டு நீண்டகால அடிப்படையில் இலகு கொடுப்பனவு முறைகளின் கீழ் கொள்வனவு செய்யக்கூடியவாறு நாடு முழுவதிலும் விசேட வீடமைப்புக் கருத்திட்டங்களை அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் திட்டமிடப்பட்டுள்ள மற்றும் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வீடமைப்புக் கருத்திட்டங்களை வரிசைப்படுத்தல் மற்றும் அவை அடைந்துகொண்டுள்ள முன்னேற்றம் பற்றிய மீளாய்வு கீழே தரப்பட்டுள்ளது.

லுனாவ " சீ வீவ் ரெசிடன்சீஸ் " வீடமைப்புக் கருத்திட்டம்


நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் திறைசேரியின் ஏற்பாடுகளின் கீழ் கொழும்பு மாவட்டம், மொரட்டுவை நகரப் பிரதேசத்தில் 01 ஏக்கர் 03 ரூட் விசாலமான லுனாவ தானாயம்வத்த எனும் காணியில் 2012 ஆம் ஆண்டு நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட 356 வீட்டு அலகுகளைக் கொண்ட "சீ வீவ் ரெசிடன்சீஸ்" வீடமைப்புக் கருத்திட்டம் மொரட்டுவை மாநகர சபையுடன் நீண்டகாலமாக நிலவிவந்த சிக்கல்களுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுத்து, இருதரப்பினருக்கும் வெற்றியளிக்கும் வகையில் லுனாவ "சீ வீவ் ரெசிடன்சீஸ்" வீடமைப்புக் கருத்திட்டம் 2021 ஆண்டு ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதி நகர அபிவிருத்தி, கழிவுப்பொருள் அகற்றல் மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ கலாநிதி நாலக்க கொடஹேவா அவர்களின் தலைமையில் திறந்துவைக்கப்பட்டது.

இந்த காணி காலி வீதிக்கு சுமார் 01 கிலோ மீற்றர் தூரத்திலும், லுனாவ புகையிரத நிலையத்திற்கு 20 மீற்றர் அருகாமையிலும் அமைந்துள்ளதுடன், சகல வசதிகளும் அதாவது வங்கி, வைத்தியசாலை, பாடசாலை மற்றும் சேவை நிலையங்களுக்கு இலகுவில் குறைந்த நேரத்தில் செல்லக்கூடியதாக அமைந்துள்ளமை கருத்திட்டத்திற்கு விசேட பயன்களைப் பெற்றுத்தருகின்றது. மேலும் இந்த வீடமைப்புக் கருத்திட்டத்தின் ஒரு கட்டிடத்திற்கு கடல் தென்படக்கூடியதாக உள்ளமை இதன் கொள்வனவாளர்களை ஈர்க்கக் காரணமாக அமைந்தது.

410 சதுர அடி, 02 அறைகள் மற்றும் 356 வீட்டு அலகுகளின் விற்பனை விலைகள் 4.5 " 5.5 மில்லியன் ரூபாவாகும் என்பதுடன், 03 கட்டிடங்களைக் கொண்ட இந்த வீடமைப்புக் கருத்திட்டம் பின்வருமாறு அமைந்துள்ளது.

- - ஏ - கட்டிடம் - 176
- - பீ - கட்டிடம் - 92
- - சீ - கட்டிடம் - 88







வீடமைப்புக் கருத்திட்டத்தின் வீட்டு அலகுகளை கீழ் நடுத்தர வருமானம்பெறுவோருக்கு நீக்கம் செய்யத் தீர்மானிக்கப்பட்டதன் காரணமாக பயனாளிகளுக்குப் பெற்றுக் கொடுக்க எல்லை மதில், பகல்நேர அரவணைப்பு நிலையம், பாலர் பாடசாலை, முகாமைத்துவக் கூட்டுத்தாபன அலுவலகம், பாதுகாப்புப் பிரிவுக்கான அலுவலகம் மற்றும் ஏனைய கூடங்கள், உள்ளக வீதிகள், வாகனம் நிறுத்தும் வசதிகள் போன்றனவும் உள்ளடங்கும் வகையில் இந்த நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இங்குள்ள 02 மாதிரி வீடுகளுக்கும் கொள்வனவாளர்கள் மத்தியில் பாரிய கேள்வி காணப்பட்டதுடன், மேற்படி வீட்டு அலகுகளை இலகுவாக ஆட்களுக்குப் பெற்றுக் கொடுக்க முடிந்தது. 2021 ஆம் ஆண்டு நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்ட இந்த வீடமைப்புக் கருத்திட்டத்தின் மூலம் கீழ் நடுத்தர வருமானம் பெறுவோருக்கு வீடுகள் விற்பனை செய்யப்பட்டதுடன், அதிகாரசபையின் ஊழியர்களுக்கும் இந்த வீடமைப்புக் கருத்திட்டத்திலிருந்து தவணைக் கொடுப்பனவு அடிப்படையில் வீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

இந்த வீடமைப்புக் கருத்திட்டத்தின் சகல வீட்டு அலகுகளும் விற்பனை முறையியல் மூலம் நீக்கம் செய்வதற்காக 2021.12.31 ஆம் திகதியளவில் ஆரம்ப கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளன.

ஆம் ஆண்டின் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள குறைந்த வருமான வீடமைப்புக் கருத்திட்டங்கள

துடுவேகொட குறைந்த செலவின நகர்ப்புற வீடமைப்புக் கருத்திட்டம் – கட்டம் I



உத்தேச துடுவேகொட நகர்ப்புற வீடமைப்புக் கருத்திட்டம் ஹிக்கடுவ பிரதேச செயலாளர் பிரிவின் 59(ஏ) ஹிக்கடுவ நகரம் எனும் கிராம அலுவலர் பிரிவில் குடாகொடவவெலதெனிய எனும் காணியில் அமைந்துள்ளது. இக்கருத்திட்டம் குறைந்த வருமானம் மற்றும் நடுத்தர வருமானம் பெறுவோரை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படும் விசேட கருத்திட்டமாகும் என்பதுடன், இக்கருத்திட்டம் 02 கட்டங்களின் கீழ் அமுல்படுத்தப்படும். இதன் முதற் கட்டத்தை 2022 ஆம் ஆண்டில் அமுல்படுத்த தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரமும், அமைச்சரவையின் அங்கீகாரமும் கிடைத்துள்ளதுடன், அமைச்சின் ஊடாக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதன் 01 கட்டத்தின் கீழ் சுனாமியால் இடம்பெயர்ந்த 32 குடும்பங்களுக்கு 32 வீட்டு அலகுகளைக் கொண்ட குறைந்த வருமான வீடமைப்புக் கருத்திட்டமும், 02 ஆம் கட்டத்தின் கீழ் நடுத்தர வருமானம் பெறும் சமுதாயத்தினருக்கு 160 வீட்டு அலகுகளைக் கொண்ட விசேட வீடமைப்புக் கருத்திட்டமாகவும் மொத்தம் 192 வீட்டு அலகுகளைக் கொண்ட கருத்திட்டமாக நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், 01 கட்டத்துக்கான நிர்மாணிப்புச் செலவினத்தை

பகுதி பகுதியாக திறைசேரியின் ஏற்பாடுகள் மூலமும், 01 கட்டத்தை அமுல்படுத்திய பின்னர் விடுவிக்கப்படும் காணியில் அரச தனியார் பங்குடைமை முறையியலின் கீழ் 02 ஆம் கட்டத்தை அமுல்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்திட்ட நிலப்பகுதி இதன் 01 ஆம் கட்டம் மற்றும் 02 ஆம் கட்டம் என்ற வகையில் தனித்தனியான பிரவேசப் பாதைகளைக் கொண்டுள்ளதுடன், பொது வசதிகளை கூட்டாகப் பயன்படுத்தாதவாறு பௌதீக ரீதியான வித்தியாசங்களைக் கொண்ட 02 கருத்திட்டங்களாக அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இக்கருத்திட்டங்களின் 01 கட்டத்தை அமுல்படுத்த முதல் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் சமூக - பொருளாதார ஆய்வு மேற்கொள்ளப்பட்டு குறைந்த வருமான வீடமைப்புக் கருத்திட்டத்தை அமுல்படுத்துவதன் தேவை இனங்காணப்பட்டுள்ளதுடன், மேலும் இப்பிரதேசத்தின் அமைவிடம் சுற்றுலாத்துறைக்குள்ள கேள்வி ஆகிய காரணிகளை இலக்காகக் கொண்டு இரண்டாம் கட்டத்திற்கு நடுத்தர வருமானம் பெறுவோருக்கான கருத்திட்டமொன்றை அமுல்படுத்த சந்தை ஆய்வொன்று நடாத்தப்பட்டது. இதன் போது இப்பிரதேசத்திற்கு நடுத்தர வகுப்பினருக்கான வீடமைப்புத் திட்டத்திற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கொள்வனவாளர்களின் உயர் கேள்வி நிலவுகின்றமை உறுதி செய்யப்பட்டது.

எண்ணக்கருசார் திட்டத்திற்கு அமைய கருத்திட்டத்தின் 01 கட்டம் 4 (G + 3) மாடிகளைக் கொண்ட 02 கட்டிடங்களாக 550 சதுர அடிகள் வீதமான 32 வீடுகளை உள்ளடக்கியதாகும். மேலும் உள்ளக வீதிக் கட்டமைப்பு, பொது வசதிகள், களியாட்ட இடவசதிகள், மலசல கழிவகற்றல் குழாய்க் கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதற்கும், தோட்ட அழங்கார நடவடிக்கைகள் மற்றும் வாகனத் தரிப்பிட வசதிகள் போன்றனவும் உள்ளடங்கும். கட்டம் 01 இற்கான மதிப்பீட்டு செலவினம் ரூ.மி. 157.9 ஆகும்.

இதன் போது பிரதேச செயலாளர் மற்றும் வெளிக்கள அலுவலர்களின் சிபாரிசின் பேரில் இந்த வீடுகளை இலக்குப் பயனாளிக் குடும்பங்கள் 32 இற்கு நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இதன் போது கருத்திட்டத்தின் வீட்டு அலகுகளை நீக்கம் செய்வது இலக்குக் குழுவின் கொடுப்பனவு கொள்ளளவுக்கு அமைய தீர்மானிக்கப்படும் என்பதுடன், நிர்மாண செலவினத்தின் ஒரு பகுதியை உச்சளவாக 30 வருட காலப்பகுதிக்குள் வட்டி இன்றி தவணை அடிப்படையில் அறவிட்டுக் கொள்ள வேண்டி ஏற்படும். அதற்கமைய கொடுப்பனவு கொள்ளளவை கவனத்தில் கொண்டு

ரூ. 1,000,000.00 ஆன தொகையை 30 வருட காலப்பகுதிக்குள் வட்டி இன்றி அறவிட்டுக் கொள்ள பிரேரிக்கப்படுவதுடன், ஒரு பயனாளியிடமிருந்து அறவிட்டுக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள மாதாந்த தவணைப்பணம் ரூ. 2,778.00 ஆகும்.

மேலும், இந்த வீடமைப்புக் கருத்திட்டத்தின் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தை தாபிப்பதற்கு ரூபா 50,000.00 ஆன தொகையை ஒவ்வொரு வீட்டின் பயனாளியிடமும் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் அறவிட்டுக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

பயனாளிகளுக்கு 30 வருடம் நிறைவடையும் வரை உறுதிகளைப் பெற்றுக் கொள்ள முடியாமை காரணமாக மேற்படி காலப்பகுதிக்குள் கட்டிடங்களின் பராமரிப்பு செலவினத்தை நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை தாங்கிக் கொள்ள வேண்டும். எனவே, நிபந்தனைகளுடனான உரிமப்பத்திரத்தின் மீது ஆட்சியுரிமையை பயனாளிகளுக்கு நீக்கம் செய்த பின்னர், கூட்டாட்சி கட்டிடங்களின் பராமரிப்பு, முகாமைத்துவம் மற்றும் நிருவாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கூட்டாட்சி முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தை தாபிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் திரட்டிய நிதியத்தின் ஏற்பாடுகளின் மூலம் கருத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. மேலும், தற்போது கருத்திட்டத்தின் பெறுகைக்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாவலப்பிட்டி "சொய்சாகெலே" மீள்வீடமைப்புமயமாக்கல் கருத்திட்டம







நாவலப்பிட்டி மேற்கு கிராம அலுவலர் பிரிவுக்கு உரித்தான சொய்சாகெலே தொழிலாளர் வீடமைப்புத் திட்டம் 03 ரூட் 18 பர்சஸ் அளவான காணிப்பகுதியில் அமைந்துள்ளது.

வீடுகளுக்குப் போதியளவு உட்கட்டமைப்பு வசதிகள் இன்றி முறையற்ற வீடுகளில் சுமார் 50 வருட காலமாக இவர்கள் வாழ்ந்துவந்துள்ளார்கள் என்பதுடன், இவர்கள் நகரத்தில் முறையற்ற தொழில்வாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் வர்க்கத்தினராகும். தற்போதைய சனநெரிசல்மிக்க சூழலில் நோய் பரவும் அபாயம் உயர்ந்துள்ளது. வீட்டு அலகுகள் 80 ஐக் கொண்ட வீடமைப்புக் கருத்திட்டத்தை அமுல்படுத்த 2018 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டதுடன், இந்த வீடமைப்புக் கருத்திட்டத்தை 2019 ஆம் ஆண்டில் அமுல்படுத்த தேசிய திட்டமிடல் திணைக்களம் சிபாரிசு செய்துள்ளது.

எனினும் கருத்திட்டத்தை 2021 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு புதிய தேவைப்பாடுகளை இனங்காண நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை மீண்டும் மேற்கொண்ட சமூக பொருளாதார ஆய்வுக்கு அமைய இந்த வீடமைப்புத் தொகுதியில் 83 வீட்டு அலகுகள் இனங்காணப்பட்டன. தற்போது அமைச்சரவையின் அங்கீகாரமும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, இலக்குப் பயனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அவர்களுக்கு புதிய வீடுகள் உட்பட பௌதீக சூழலை அபிவிருத்தி செய்வதற்கு மற்றும் சமூக பயன்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன், நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் 2022 ஆம் ஆண்டில் இந்தக் கருத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. இதன் போது நீண்டகால நிலைபேறான நல்ல நிலைத்திருத்தல் மற்றும் மனித அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு

உத்தேச குடியிருப்பின் உள்ளக, பௌதீக மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளை பெற்றுக் கொடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த வீடமைப்புக் கருத்திட்டத்தை அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக் காணப்படுகின்ற காணி நிலஅளவையாளர் திணைக்களத்தினால் அளவை செய்யப்பட்டு தயார் செய்யப்பட்ட நில அளவையாளர் நாயகத்தின் 1928.02.09 ஆம் திகதிய பி.பி. 8305 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 01 ஆக குறிப்பிடப்பட்டுள்ள பகுதியாகும் என்பதுடன், இது நாவலப்பிட்டி பிரதேச சபைக்கு சுவீகரிக்கப்பட்ட 05 ஏக்கர் 01 ரூட் 24 பர்சஸ் அளவான காணியில், 01 ஏக்கர் 1.9 பர்சஸ் அளவான பகுதியாகும். இது ஆ.வ. 7035 இன் அரசுக்கு உரித்தான காணிப் பகுதியாக குறிப்பிடப்பட்டுள்ளது. இக்காணியில் வசிப்பவர்களுக்கு வீடமைப்புக் கருத்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்காக மேற்படி காணியை நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு சாட்டுதல் செய்ய நாவலப்பிட்டி நகர சபை இணக்கம் தெரிவித்துள்ளது.

இக்கருத்திட்டத்தின் எண்ணக்கருசார் திட்டத்திற்கு அமைய 550 சதுர அடிகள் வீதமான மின்உயர்த்தி இல்லாத 83 வீட்டு அலகுகளை உள்ளடக்கிய வீடமைப்புத் திட்டமாக நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், இது உள்ளக வீதிக் கட்டமைப்பு, பொது வசதிகள், களியாட்ட இடவசதிகள், அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டு மலசல கழிவகற்றல் குழாய்க் கட்டமைப்பு, சிறுவர் பூங்கா மற்றும் வாகனத் தரிப்பிட வசதிகள் போன்றனவும் உள்ளடங்கும். இக்கருத்திட்டத்திற்கான மதிப்பீட்டு செலவினம் ரூ.மி. 408 ஆகும்.

இதன் போது பிரதேச செயலாளர் மற்றும் வெளிக்கள அலுவலர்களின் சிபாரிசின் பேரில் இந்த வீடுகளை இலக்குப் பயனாளிகள் 83 பேருக்கும் நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இதன் போது கருத்திட்டத்தின் வீட்டு அலகுகளை நீக்கம் செய்வது இலக்குக் குழுவின் கொடுப்பனவு கொள்ளளவுக்கு அமைய தீர்மானிக்கப்படும் என்பதுடன், நிர்மாண செலவினத்தின் ஒரு பகுதியை உச்சளவாக 30 வருட காலப்பகுதிக்குள் வட்டி இன்றி தவணை அடிப்படையில் அறவிட்டுக் கொள்ள வேண்டியுள்ளது.

அதற்கமைய கொடுப்பனவு கொள்ளளவை கவனத்தில் கொண்டு ரூ. 1,000,000.00 ஆன தொகையை 30 வருட காலப்பகுதிக்குள் வட்டி இன்றி அறவிட்டுக் கொள்ள பிரேரிக்கப்படுவதுடன், ஒரு பயனாளியிடமிருந்து அறவிட்டுக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள மாதாந்த தவணைப்பணம் ரூ. 2,778.00 ஆகும்.

மேலும், இந்த வீடமைப்புக் கருத்திட்டத்தின் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தை தாபிப்பதற்கு ரூபா 75,000.00 ஆன தொகையை ஒவ்வொரு வீட்டின் பயனாளியிடமும் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் அறவிட்டுக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

பயனாளிகளுக்கு 30 வருடம் நிறைவடையும் வரை உறுதிகளைப் பெற்றுக் கொள்ள முடியாமை காரணமாக மேற்படி காலப்பகுதிக்குள் கட்டிடங்களின் பராமரிப்பு செலவினத்தை நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை தாங்கிக் கொள்ள வேண்டும். எனவே, நிபந்தனைகளுடனான உரிமப்பத்திரத்தின் மீது ஆட்சியுரிமையை பயனாளிகளுக்கு நீக்கம் செய்த பின்னர், கூட்டாட்சி கட்டிடங்களின் பராமரிப்பு, முகாமைத்துவம் மற்றும் நிருவாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கூட்டாட்சி முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தை தாபிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் திரட்டிய நிதியத்தின் ஏற்பாடுகளின் கீழ் கருத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

நகர்ப்புற குறைந்த வருமானம் பெறும் மற்றும் நடுத்தர வருமானம் பெறும் சமுதாயத்தினருக்கான வீடமைப்புக் கருத்திட்டங்களை அமுல்படுத்த உகந்த காணிகளை இனங்காணல்

நகர்ப்புற குறைந்த வருமனம் பெறும் சமுதாயத்தினருக்கு வீடமைப்புத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கத் தேவையான காணி ஒதுக்கம் மற்றும் நகர்ப்பு நடுத்தர வருமானம் பெறும் சமுதாயத்தினருக்கு தாங்கிக் கொள்ளக்கூடிய விலையில் வீடுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு உகந்த இனங்காண்பதற்கு புதிய முகாமைத்துவத்தின் வழிகாட்டலின் கீழ் பரந்தளவிலான வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. இதன் போது வீடுகளை நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள காணிகளை தெரிவு செய்யும் போது அரசாங்கத்திற்கு உரித்தான காணிகள் தொடர்பில் முன்னுரிமை வழங்கப்பட்டதுடன், அதற்கான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேச செயலகங்கள் ஊடாக நாடளாவிய ரீதியில் ஆய்வொன்று நடாத்தப்பட்டது.

மேலும், காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழு, உள்ளூராட்சி மன்றங்கள் போன்ற காணி உரித்தைக் கொண்டுள்ள ஏனைய நிறுவனங்களுடனும் ஒரங்கிணைப்பை மேற்கொண்டு அடுத்துவரும் மூன்று ஆண்டுகளுக்கு வீடமைப்புக் கருத்திட்டங்களுக்குத் தேவையான காணிகளை இனங்காண முடிந்தமை முன்னைய

#	காணியின் பெயர்	அளவு (ஹெக்டயர்)
1	வத்தளை மில்லகஹவத்த	2.4532
2	நிட்டம்புவ ஒசர்ட்வத்த காணி	3.0862
3	ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே	0.2963
4	கடுவளை தபால் அலுவலக வளவு	0.2757

ஆம் ஆண்டில் அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள நடுத்தர வருமான வீடமைப்புக் கருத்திட்டங்கள்

வத்தளை "வெலிசர ஹைட்ஸ் ரெசிடன்சீஸ்" வீடமைப்புக் கருத்திட்டம



வத்தளை பிரதேச செயலாளர் பிரிவில் எல்பிட்டிவல கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள "வெலிசர ஹைட்ஸ் ரெசிடன்சீஸ்" வீடமைப்புக் கருத்திட்டம் நடுத்தர வருமானம் பெறும் சமுதாயத்தினருக்கான விசேட வீடமைப்புக் கருத்திட்டமாகும். இது சமூக ரீதியில் கூடுதல் வசதிகளின் கீழ் ஆட்களின் தேவைகளுக்கு அமைவான உத்தேச கருத்திட்டமாகும் என்பதுடன், வெலிசர மற்றும் ராகம நகரங்களை நடுவே அமைந்துள்ளது.

இதன் மூலம் வீடுகளை கொள்வனவு செய்யும் ஆட்களுக்கு பல்தொகுதிக் கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், அழகியற்கலை நிலையங்கள், விளையாட்டு மைதானம் மற்றும் அலுவலக கட்டிடங்களை கொண்ட வீடமைப்புக் கருத்திட்டமொன்றிலிருந்து ஒரு வீட்டைக் கொள்வனவு செய்யும் வாய்ப்புக் கிடைக்கும். பொது இடவசதிகள், சிறுவர் பூங்கா, வாகன

நிறுத்துமிட வசதிகளைக் கொண்ட இந்த வீடமைப்புக் கருத்திட்டம் கொழும்பு நகரத்திற்கு 18 கிலோ மீற்றர் தூரத்தில் கொழும்பு நீர்கொழும்பு வீதிக்கு மிக அருகாமையில் அமைந்துள்ளது.

வத்தளை பிரதேச செயலாளர் பிரிவின், எல்விட்டிவல கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள "வெலிசர ஹைட்ஸ் ரெசிடன்சீஸ்" வீடமைப்புக் கருத்திட்டம் நடுத்தர வருமானம் பெறும் சமுதாயத்தினருக்கான விசேட வீடமைப்புக் கருத்திட்டமாகும். இது சமூக ரீதியில் கூடுதல் வசதிகளின் கீழ் ஆட்களின் தேவைகளுக்கு அமைவான உத்தேச கருத்திட்டமாகும் என்பதுடன், வெலிசர ராகம நகரங்களுக்கு மத்தியில் அமைந்துள்ளது. இது ராகம புகையிரத நிலையத்திற்கு அருகே மிகவும் மனங்கவர் சூழலில் அமைந்துள்ளது.

இதன் மூலம் வீடுகளை கொள்வனவு செய்பவர்களுக்கு பல்தொகுதிக் கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், அழகியற்கலை நிலையங்கள், விளையாட்டு மைதானம் மற்றும் அலுவலக கட்டிடங்களை கொண்ட வீடமைப்புக் கருத்திட்டமொன்றிலிருந்து ஒரு வீட்டைக் கொள்வனவு செய்யும் வாய்ப்புக் கிடைக்கும். பொது இடவசதிகள், சிறுவர் பூங்கா, வாகன நிறுத்துமிட வசதிகளைக் கொண்ட இந்த வீடமைப்புக்

கருத்திட்டம் கொழும்பு நகரத்திற்கு 18 கிலோ மீற்றர் தூரத்தில் கொழும்பு நீர்கொழும்பு வீதிக்கு மிக அருகாமையில் அமைந்துள்ளது.

06 மாடிகளைக் கொண்ட (G + 5) மாடிகள் மற்றும் 17 கட்டிடங்களைக் கொண்டதாக 408 வீட்டு அலகுகள் மற்றும் சகல பொது வசதிகளையும் உள்ளடக்கியதாக நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பீட்டு மொத்த செலவினம் ரூ.மி. 4.738.68 ஆகும். இது ஏ மற்றும் பீ ஆகிய இரண்டு வகையான வீடுகளைக் கொண்டதாகும் என்பதுடன், ஏ வகையிலான வீடுகள் 700 சதுர அடிகள் மற்றும் 02 படுக்கை அறைகள், மண்டபம், சமையலறை, குளியலறை மற்றும்

பெல்கனியைக் கொண்டதுடன், 204 வீட்டு அலகுகள் காணப்படுகின்றன. பீ வகையிலான வீடுகள் 908 சதுர அடிகள் மற்றும் 03 படுக்கை அறைகள், மண்டபம், சமையலறை, 02 குளியலறைகள் மற்றும் பெல்கனியைக் கொண்ட 204 வீடுகள் உள்ளடங்கும்.

அதற்கமைய மில்லகஹவத்த, வத்தளையில் அமைந்துள்ள 700 சதுர அடி மற்றும் 908 சதுர அடிகளைக் கொண்ட 408 வீடுகளை திட்டமிடல், நிர்மாணித்தல் மற்றும் கருத்திட்டத்திற்கு நீதியீட்டுவதற்காக அர்த்தப்பூர்வமாக பதில் நடவடிக்கை மேற்கொள்ளும் மதிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த விலைமனுதாரராக இன்டர்நெசனல் கன்ஸ்ட்ரக்சன் கொன்சோடியம் (பிரைவட்) லிமிடட் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டது.

மனங்கவர் சூழலில் அமைந்துள்ள இக்காணிப்பகுதியிலுள்ள இந்த "வெலிசர ஹைட்ஸ் ரெசிடன்சீஸ்" வீடமைப்புக் கருத்திட்டத்திற்கு நகர அபிவிருத்தி, கழிவுப்பொருள் அகற்றல் மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாலக்க கொடஹேவா அவர்களின் தலைமையில் 2021.12.03 ஆம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டு இதன் வேலைகள் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.











ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே நகர வீடமைப்புக் கருத்திட்டம்

ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே பிரதேச செயலாளர் பிரிவில் மேற்கு எத்துல்கோட்டே கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள ஸ்ரீ ஜயவர்த்தனபுர தபால் அலுவலகம் காணப்படுகின்ற 0.2963 ஹெக்டயர் அளவான காணியில் இந்த வீடமைப்புக் கருத்திட்டத்தை அமுல்படுத்த நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஏற்கெனவெ திட்டங்களை தயார் செய்துள்ளது. இங்கு 1950 சதுர மீற்றர் அளவான வதிவிட இடவசதி மற்றும் 4225 சதுர மீற்றர் அளவான அலுவலக வளவு, 225 சதுர மீற்றர் அளவான வணிக அலகுகள் மற்றும் 556 சதுர மீற்றர் அளவான பொது வசதிகளைக் கொண்ட வளவை நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்காணியின் பெறுமதி மற்றும் அமைவிடத்தை அடிப்படையாகக் கொண்டு வதிவிட, வணிக மற்றும் உத்தேச ஆகிய மூன்று துறைகளையும் மையமாகக் கொண்டு நடுத்தர வருமானம்பெறும் சமுதாயத்தினரை இலக்காகக் கொண்டு கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டமாக இதனை அமுல்படுத்த நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை தற்போது திட்டமிட்டுள்ளது.

இக்கருத்திட்டத்தின் உத்தேச எண்ணக்கருத் திட்டத்திற்கு அமைய 11 (G + 10) மாடிகள் மற்றும் கீழ் மாடிகள் 03 ஐக் கொண்ட கட்டிடத்தை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 03 அலுவலகங்களில் அலுவலக வளவொன்றை

பேணிவருவதற்கும் எஞ்சிய 07 மாடிகளில் 750 சதுர அடிகளைக் கொண்ட 02 படுக்கை அறையுடனான 56 வீடுகள், 1000 சதுர அடிகளைக் கொண்ட 03 படுக்கை அறைகளுடனான 56 வீட்டு அலகுகளுமாக 112 வீடுகள் மற்றும் மேலதிக உயர் மாடியில் 08 வீட்டு அலகுகளுமாக (மொத்தம் 120 வீடுகள்) நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளதுடன், இதன் அடித்தளத்திலிருந்து கீழே 03 மாடிகள் வாகனத் தரிப்பிடங்களாக பயன்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த செலவினம் ரூ.மி. 4000 ஆகும்.

இக்காணியை புதிய அபிவிருத்தி பணியொன்றுக்குக் கொடுப்பதற்குப் பதிலாக காணியின் தற்போதைய பெறுமதிக்கு உகந்தவாறு புதிய தபால் அலுவலக வளவு, தபால் இணைப் பரிமாற்ற வளவு, சிரேஷ்ட தபால் அத்தியட்சகர் அலுவலக வளவு மற்றும் உத்தியோகபூர்வ இல்லம் ஆகிய வசதிகளை தபால் திணைக்களத்திற்கு பெற்றுக் கொடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமை அலுவலகம் தற்போது மாதாந்த வாடகை செலுத்துவதன் அடிப்படையில் பேணிவரப்படுவதனால்

அதற்கான புதிய அலுவலக வளவொன்றை தாபிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

உத்தேச கருத்திட்ட வளவு கலப்பு அபிவிருத்தி அதாவது வணிக மற்றும் வதிவிட அபிவிருத்திக்கு உகந்த பிரதேசமொன்றில் அமைந்துள்ளமையும், வசிப்பவர்களுக்கு தமது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளக்கூடிய பாடசாலைகள், வங்கி, வணிக நகரம், வர்த்தகக் கட்டிடத்தொகுதிகள், பெத்தகான, தியத உயன போன்ற திறந்தவெளிகளுக்கு இலகுவாக பிரவேசிக்க முடிந்தமை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டதாக ஏற்கெனவே முழுமையான பிரதேசமொன்றில் அமைந்துள்ளமை முதலீட்டாளர்கள் மற்றும் கொள்வனவாளர்களை இலகுவாக ஈர்க்கக்கூடியதாக உள்ளமை கருத்திட்டத்தின் பெரும் பயனாக இருக்கும் என்று குறிப்பிட முடியும்.


அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு இந்த வீடமைப்புக் கருத்திட்டத்தின் மூலம் வீடுகள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளதுடன், காணப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், வசதிகளுடன் பிரதேசங்களில் புதிய அபிவிருத்திகளை மேற்கொள்ள பங்களிப்புச் செய்தல், அலுவலக கட்டிடத்தொகுதிகளுக்கு மனங்கவர் மற்றும் புதுப்பொழிவை பெற்றுக் கொடுத்தல் மற்றும் கலப்பு அபிவிருத்தி மூலம் வருமான உருவாக்கம் மற்றும் அதன் மூலம் திறைசேரிக்கு செலவினச் சுமையாக இருக்காது தற்போது குறைப் பயன்பாட்டைக் கொண்டுள்ள நகர முக்கிய காணிகளின் பயன்பாட்டை அதிகரிப்பதும் கருத்திட்டத்தின் பயன்களாகும்.

இந்தக் கருத்திட்டத்தை அமுல்படுத்த முன்னர் இப்பிரதேசத்தில் கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டமொன்றை அமுல்படுத்துவதன் சாத்தியக்கூறு பற்றி அளவிடுவதற்காக நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்படி கருத்திட்டத்திற்கான சாத்தியக்கூறுக் கற்கை மேற்கொள்ளப்பட்டது.

இதற்குத் தேவையான ஏற்பாடுகளை திறைசேரிக்குச் சுமையாக இருக்காதவாறு பூர்த்தி செய்துகொள்வதற்கும், முழுமையாக நிர்மாணிப்புக்கான செலவினத்தை, எஞ்சிய வீட்டு அலகுகளை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருமானத்திலிருந்து ஈடுசெய்துகொள்வதற்கும், அரச தனியார் பங்குடைமை முறையியல் ஊடாக அமுல்படுத்தவும் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. மேலும் கருத்திட்டக் குழு தாபிக்கப்பட்டுள்ளதுடன், எண்ணக்கருசார் திட்டமும் தயார் செய்யப்பட்டுள்ளது. இதற்கான சாத்தியக்கூறுக் கற்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.







கடுவளை கலப்பு அபிவிருத்திக கருத்திட்டம்


கலப்பு கருத்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்கு (வீடமைப்பு மற்றும் அலுவலக வசதிகளைக் கொண்டதாக) கடுவளை தபால் அலுவலகம் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகம் சார்பாக கொழும்பு மாவட்ட சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகரினால் அளவிட்டு சான்றுப்படுத்தப்பட்ட ஊழு.∴முனுறு.∴2021.∴463 ஆம் இலக்க சுவட்டுத்திட்டத்தின் காணித்துண்டு இலக்கம் ஏ எனும் பூ.தி. 1448 இன் காணித் துண்டு இலக்கம் 01 எனும் 0.2757 ஹெக்டயர் அளவான (108 பர்சஸ்) காணி இனங்காணப்பட்டுள்ளது. மேற்படி காணியை இக்கருத்திட்டத்திற்கு நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையிடம் பெற்றுக் கொடுக்க தபால் திணைக்களம் இணக்கம் தெரிவித்துள்ளது.




உயர் வர்த்தகப் பெறுமதியைக் கொண்ட இக்காணியில் வீடு உட்பட வணிக, சேவைகள் மற்றும் புதிய அலுவலக வளவைத் தாபிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் போது 10,818 சதுர மீற்றர் அளவான வதிவிட இடவசதிகள் மற்றும் 2711 சதுர மீற்றர் அளவான அலுவலக வளவை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இக்காணியை புதிய அபிவிருத்திப் பணிக்குப் பெற்றுக் கொடுப்பதற்குப் பதிலாக காணியின் இன்றைய பெறுமதிக்கு ஏற்றவாறு புதிய தபால் அலுவலக வளவு, தபால் பயிற்சி நிறுவனம், உத்தியோகபூர்வ இல்லங்கள் ஆகிய வசதிகள் தபால் திணைக்களத்திற்குப் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன.

இக்கருத்திட்டத்தை நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை அமுல்படுத்தவுள்ளதுடன், தேவையான ஏற்பாடுகளை திறைசேரிக்குச் சுமையாக இருக்காது பூர்த்தி செய்துகொள்வதற்கு அரச தனியார் பங்குடைமை அடிப்படையில் தேசிய போட்டித்தன்மைமிக்க முறையில் தகுந்த முதலீட்டாளர் ஒருவரை தெரிவு செய்துகொள்வதன் மூலம் நிதியீட்டல் செய்துகொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.









நிட்டம்புவ "ஓர்சார்ட்வத்த" வீடமைப்புக் கருத்திட்டம



நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை, நடுத்தர வகுப்பினருக்கான வீடமைப்புக் கருத்திட்டங்களை அமுல்படுத்த கொழும்பு, கம்பஹா மற்றும் அதுசார்ந்த உப நகரங்களில் அமைந்துள்ள அரசாங்கத்திற்கு உரித்தான காணிகளை இனங்கண்டு வருவதுடன், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு உரித்தான அத்தனகல்ல பிரதேச செயலாளர் பிரிவில் நம்படலுவ கிராமத்தில் அமைந்துள்ள டுசுஊ.்.இ.்.3179 ஆம் (வரைபட இலக்கம் 777) இலக்க காணித்துண்டாக குறிப்பிடப்பட்டுள்ள 3.7977 ஹெக்டயர் அளவான காணி இனங்காணப்பட்டுள்ளது. இக்காணியிலிருந்து 3.389 ஹெக்டயர் அளவான காணிப் பகுதியை பயன்படுத்தி நிட்டம்புவ ஓர்சார்ட்வத்த வீடமைப்புக் கருத்திட்டத்தை திட்டமிட எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன், மேற்படி காணியை, காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குப் பெற்றுத்தர விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்திட்டத்தை நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை அமுல்படுத்தவுள்ளதுடன், தேவையான ஏற்பாடுகளை திறைசேரிக்குச் சுமையாக இருக்காது பூர்த்தி செய்துகொள்வதற்கு அரச தனியார் பங்குடைமை அடிப்படையில் தேசிய போட்டித்தன்மைமிக்க முறையில் தகுந்த முதலீட்டாளர் ஒருவரை தெரிவு செய்துகொள்வதன் மூலம் நிதியீட்டல் செய்துகொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

அநுராதபுரம் கலப்பு அபிவிருத்திக கருத்திட்டம்

நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நகர்ப்புறப் பிரதேசங்களை சார்ந்ததாக நீண்டகால இலகு கொடுப்பனவு முறையில் கொள்வனவு செய்யக்கூடியவாறு வீடுகள் மற்றும் அலுவலக வசதிகளைக் கொண்டதாக கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டமொன்றை அமுல்படுத்த அநுராதபுரம் தபால் அலுவலகம் அமைந்துள்ள காணி இனங்காணப்பட்டுள்ளது.

தபால் திணைக்களத்திற்கு உரித்தான காணிகளில் பல்தேவைக் கருத்திட்டங்களை அமுல்படுத்த அமைச்சரவையின் அங்கீகாரம் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குக் கிடைத்துள்ளதனால் அநுராதபுரம் தபால் அலுவலகம் அமைந்துள்ள காணியை நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு பெற்றுக் கொடுக்க தபால் திணைக்களம் இணக்கம் தெரிவித்துள்ளது. இதன் போது இந்த குறைப்பயன்பாட்டு காணியை அபிவிருத்திக்குப் பயன்படுத்திக் கொள்ளக்கூடியவாறு இருதரப்பினருக்கும் பயன்கள் கிடைக்கின்றவாறு மிகவும் உயர் வணிகப் பெறுமதியைக் கொண்ட இந்தக் காணியில் வீடுகள் உட்பட சேவைகள் மற்றும் புதிய அலுவலக வளவையும் தாபிக்க பிரேரிக்கப்பட்டுள்ளதுடன், இந்தக் கருத்திட்டத்தின் உத்தேச எண்ணக்கருத் திட்டத்திற்கு அமைய கீழ் மாடி, நிலக்கீழ் மாடி மற்றும் மேலே 07 மாடிகளைக் கொண்டதாக கட்டிடமொன்றை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இக்கருத்திட்டத்தை நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை 2023 ஆம் ஆண்டில் அமுல்படுத்தவுள்ளதுடன், தேவையான ஏற்பாடுகளை திறைசேரிக்குச் சுமையாக இருக்காது பூர்த்தி செய்துகொள்வதற்கு அரச தனியார் பங்குடைமை அடிப்படையில் தேசிய போட்டித்தன்மைமிக்க முறையில் தகுந்த முதலீட்டாளர் ஒருவரை தெரிவு செய்துகொள்வதன் மூலம் நிதியீட்டல் செய்துகொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துருகிரிய கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டம்

கடுவளை மாநகர சபை அதிகாரப் பிரதேசம் மற்றும் கடுவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உரித்தான அத்துருகிரியவில் அமைந்துள்ள சதாசிரிபுர காணியில் நடுத்தர வருமானம் பெறும்

வீடமைப்புக் கருத்திட்டமொன்றை அமுல்படுத்த நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை திட்டமிட்டுள்ளது. நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நீண்டகால இலகு தவணைக் கொடுப்பனவு அடிப்படையில் இந்த வீடுகளைக் கொள்வனவு செய்யக்கூடியவாறு இத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

குடும்பங்களுக்கான
2008 இன் 36 ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 25 ஆம் பிரிவுக்கு அமைய காணி கொள்ளல் சட்டத்தின் கீழ் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு இக்காணியைப் பெற்றுக் கொள்ளும் ஆற்றல் உள்ளது. அதற்கமைய அத்துருகிரியவில் அமைந்துள்ள சதாசிரிபுர காணியை நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு காணிகொள்ளல் செய்துகொள்ளத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திட்டமிடப்பட்ட கடன் வசதிகளைக் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்

சௌபாக்யா திவிமக

சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மக்களை மையமாகக் கொண்ட பொருளாதார நடவடிக்கைகளை நோக்கிப் பயணிக்கும் போது சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களை கட்டியெழுப்புவதற்காக நகரக் குறைந்த வருமானம் பெறுவோரை பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதை இலக்காகக் கொண்டு நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை "சௌபாக்யா திவிமக" தொழில்முயற்சியார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்த திட்டமிட்டுள்ளது.

இதன் போது நாடளாவிய ரீதியில் நகர்ப்புறப் பிரதேசங்களில் நுண் மற்றும் சிறு அளவிலான சுயதொழில்முயற்சியாளர்கள், சுயதொழில்வாய்ப்புக்களை எதிர்பார்த்துள்ளவர்களை தொழில்முயற்சியாளர்களாக வலுவூட்டல் மற்றும் அதன் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும், தேசிய அபிவிருத்திக்கும் பங்களிப்பு வழங்குவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்த நிகழ்ச்சித்திட்டமானது சிறு கைத்தொழில், தொழில்முயற்சி அபிவிருத்தி, கடற்றொழில் அபிவிருத்தி மற்றும் நகர கமத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகிய பிரதான துறைகளின் கீழ் அமுல்படுத்தப்படுவதுடன், இதன் பொது ஒரு பயனாளிக்கு உச்சளவாக ரூ. 300,000.00 ஆன கடன் தொகையைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும் போது கருத்திட்டத்திற்கு 20 சதவீதமான பயன் பங்களிப்புடன் அமுல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தக் கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் திறைசேரியின் ஏற்பாடுகளுக்குப் பதிலாக அரச வங்கியொன்றினூடாக இதனை அமுல்படுத்துமாறு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய மக்கள் வங்கியுடன் இணைந்து கடன் நிகழ்ச்சித்திட்டமொன்றாக இதனை அமுல்படுத்த தற்போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. இங்கு கடன் விண்ணப்பதாரிகளை அறிமுகம் செய்தல் மற்றும் கடன் பெற்றுக் கொடுத்த பின்னர் மேற்படி பயனாளிகள் பெற்றுக் கொண்டுள்ள முன்னேற்றம் பற்றிய கண்காணிப்பு மற்றும் வழிநடாத்தலை நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை மேற்கொள்ளும்.





திட்டமிடப்பட்ட கடன் வசதிகளைக் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்





மகிழ்ச்சிகரமான குடும்பம் சுபீட்சமான வீடு

நாடளாவிய ரீதியில் பரந்துள்ள நகர்ப்புற வலயங்களில் அமைந்துள்ள பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட, சேதமடைந்த வீடுகளை பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளாக மாற்றியமைத்து நகர வீடுகளை தரமான வீடுகளாக மாற்றியமைக்கும் நோக்கத்துடன், "மகிழ்ச்சிகரமான குடும்பம் - சுபீட்சமான வீடு" கடன் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நாடளாவிய ரீதியில் 25 மாவட்டங்களிலும் அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் போது தெரிவு செய்துகொள்ளப்படும் பயனாளிகளுக்கு முறையான நிதி நிறுவனங்களுக்குப் பிரவேசிக்க முடியாமையினால் நிதிசார் அதற்கு நிதி உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல் ம்றறும் வீடுகளை மேம்படுத்தத் தேவையான தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொடுத்து அவர்களின் வீடமைப்புத் தேவைகளை பூர்த்தி செய்துகொடுப்பது இதன் முக்கிய நோக்கமாகும்.

வீடுகள் 1000 தெரிவு செய்யப்பட்டு ஒரு பயனாளிக்கு ரூபா 500,000 ஆன கடன் தொகையைப் பெற்றுக் கொடுப்பது எதிர்பார்ப்பாகும்.

இக்கருத்திட்டத்திற்கு முகாமைத்துவ செலவினம் உட்பட நிதி ஏற்பாடுகளின் தேவை ரூ.மி. 517.63 ஆகும் என்பதுடன், இக்கருத்திட்டப் பிரேரணை தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. இதன் போது தேசிய திட்டமிடல் திணைக்களம் இதற்கு திறைசேரியின் நிதி ஒதுக்கப்பத்துக்குப் பதிலாக அரச அல்லது தனியார் வங்கியொன்றினூடாக இதனை அமுல்படுத்துமாறு பிரேரித்துள்ளது.

எனவே, தற்போது இந்தக் நிகழ்ச்சித்திட்டத்தை வங்கியூடாக அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் கலந்துரையாடல் மட்டத்தில் காணப்படுகின்றன.

பூர்த்தி செய்யப்பட்ட வீடமைப்புக் கருத்திட்டங்களுக்கு உறுதிகளைப் பெற்றுக் கொடுத்தல்

பொரளை "சஹஸ்புர" தொடர்மாடி வீடமைப்புக் கருத்திட்டம்



நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் அமைச்சரின் அங்கீகாரத்தின் கீழ் சஹஸ்புர தொடர்மாடி வீடமைப்புத்திட்டத்திலிருந்து நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள 204 வீடுகளில் 38 வீடுகளை இலவச கொடையின் அடிப்படையில் சாட்டுதல் செய்தல் 01 வீட்டை உரிய விற்பனை பெறுமதியை செலுத்தி முடிந்ததன் அடிப்படையில் சாட்டுதல் செய்தல் ஆகிய 02 முறைகளின் கீழ் அறுதி உறுதிகள் மூலம் வீடுகளின் உரித்தை பயனாளிகளுக்கு சாட்டுதல் செய்தல். 2021.03.16 ஆம் திகதி சஹஸ்புர தொடர்மாடி வீடுமைப்புக் கருத்திட்டத்தின் உறுதிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.



மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்



"சுய சக்தி"

மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் –2021

நாடளாவிய ரீதியில் 16 மாவட்டங்களில் நகரக் குடியிருப்புக்கள் 27 இல் வாழும் 5593 குடும்பங்களின் சமூக பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்கு 2021 ஆம் ஆண்டில் சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் கீழ் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, கண்டி, திருகோணமலை, குருநாகல், கேகாலை, இரத்தினபுரி, மன்னார், நுவரெலியா, சிலாபம் மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்கள் உள்ளடங்குகின்றன. கீழ் மட்டத்தில் சமுதாயத்தினரின் பங்கேற்பு, தலையீடு மூலம் சமுதாய அடிப்படையிலான தீர்வுகள் பற்றிக் கவனம் செலுத்தி கொவிட் 19 தொற்று நோயின் தாக்கங்களுக்குப் பதில் நடவடிக்கை மேற்கொள்வதற்கான சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களும் இதன் போது அமுல்படுத்தப்பட்டன.

நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு தேசிய கொள்கைப் பிரகடனத்திற்கு அமைய மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் அதன்

பிரதான 04 நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக குறைந்த வருமானம் பெறும் நகர்ப்புற சமுதாயத்தை செயல்ரீதியாக பங்கேற்கச் செய்துகொண்டு அவர்களை அதற்கு ஊக்குவித்து வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டது. இந்த ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டமும் பல உப நிகழ்ச்சித்திட்டங்களை கொண்டதாக அதன் பிரதான நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக அமுல்படுத்தப்பட்டன. 2021 ஆம் ஆண்டு மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட திறைசேரியின் ஏற்பாடு ரூ.மி. 30.0 ஆகும்.

அதற்கமைய இந்த ஏற்பாடுகளின் மூலம் கொவிட் தொற்றுநோய் பரவியுள்ள நிலையில் சவால்கள் வெற்றிகொள்ளப்பட்டு மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறு முன்னேற்றங்களை அடைந்துகொண்டுள்ளதுடன், வெற்றிகரமாகவும் அமுல்படுத்தப்பட்டன.

சூ	நிகழ்ச்சித்திட்டம்	2021 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட ஏற்பாடு	2021 ஆம் ஆண்டின் நிதிசார் முன்னேற்றம்	2021 ஆம் ஆண்டின் பௌதீக இலக்கு	2021 ஆம் ஆண்டின் பௌதீக முன்னேற்றம்
	மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	30.00	21.55	100%	94%
01	சௌபாக்யா சமுதாய சக்தி - சமுதாயத்தை ச%க ரீதியில் வலுவூட்டும் நிகழ்சசித்திட்டம்	13.24	8.86	100%	97%
02	சௌபாக்யா சவிபல - சமுதாயத்தை பொருளாதார ரீதியாக வலுவூட்டல்	6.72	4.00	100%	76%
03	சௌபாக்யா நெனபல - சிறுவர் மற்றும் இளைஞர், யுவதிகளை கல்வி ரீதியாக வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்	5.13	4.81	100%	100%
04	சௌபாய்கா திவிவருன - சமுதாயத்தை கலாசார ரீதியாக வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்	2.94	2.51	100%	100%
05	உலக குடியிருப்புத் தின நிகழ்ச்சித்திட்டம்	1.97	1.37	100%	100%

சௌபாக்யா பிரஜா சக்தி –
சமூக ரீதியாக சமுதாயத்தை வலுவூட்டல

சௌபாக்யா பிரஜா சக்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறுவோருக்கு மத்தியில் சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களை உருவாக்கி கலாசார ரீதியான பல்லினத்தன்மையை புரிந்துகொண்டு சமுதாயத்தை தனித்தனியாக மற்றும் கூட்டாக சமூக ரீதியில் வலுவூட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களைத் தாபித்தல் மற்றும் வலுவூட்டுவதன் மூலம் நிகழ்ச்சித்திட்டங்களின் நிலைபேறான தன்மை உறுதி செய்யப்பட்டதனால் இது சமுதாய அபிவிருத்தியின் முக்கியமானதொரு அம்சமாகும். 2021 ஆம் ஆண்டு சமுதாய அடிப்படையிலான 27 அமைப்புக்கள் தாபிக்கப்பட்டதுடன், இந்த அமைப்புக்களை பேணிவருவதற்கான அடிப்படை தொழில்நுட்ப உதவி மற்றும் நிதி உதவிகளும் வழங்கப்பட்டன. கொவிட் 19 தொற்று நோய்க்கு மத்தியில் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் நிலைபேறான செயற்பாட்டுக்கு உதவுவதற்காக நாடு முழுவதிலும் 16 மாவட்டங்களில் 27 குடியிருப்புக்களுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொண்டது. ஆண்டின் இறுதியில் மதிப்பீட்டுத் தகவுதிறன்களின் அடிப்படையில் இந்த சமுதாய அடிப்படையிலான அமைப்புக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றில் 03 சமுதாய அடிப்படையிலான அமைப்புக்கள் தெரிவு செய்துகொள்ளப்பட்டன.

குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களில் வாழும் சமுதாயத்தினரை போதைவஸ்துக்களிலிருந்து தடுத்துக் கொள்வதற்காக விழிப்புணர்வூட்டல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகிய விளைதிறன்மிக்க அணுகுமுறைகளின் ஊடாக நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை 2021 ஆம் ஆண்டில் தெரிவு செய்துகொள்ளப்பட்ட நகரக் குறைந்த வசதிகளைக் கொண்ட 17 குடியிருப்புக்களில் □போதையற்ற குடியிருப்பு□ எனும் நிகழ்ச்சித்திட்டத்த அமுல்படுத்தியது.

பூகோள ரீதியில் பரவியுள்ள கொவிட் - 19 தொற்று நோய்க்குப் பதில் நடவடிக்கையாக நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் அத்தியாவசிய நிவாரண சேவைகள் தொடர்ச்சியாகப் பேணிவரப்பட்டு சமுதாயத்தை சம்பந்தப்படுத்திக் கொண்டு ஆரம்ப சுகாதார சேவைகள் முறையை மென்மேலும் சிறந்ததாக்குவதற்கு தமது சுகாதார நிகழ்ச்சித்திட்டங்கள் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. மேலும் மாற்றுத்திறனாளிகளான ஆட்களுக்கு அத்தியாவசியமான உபசரணை உபகரணங்களை பெற்றுக் கொடுப்பதன் மூலம் அவர்களுக்கு அவர்களாகவே சமூகத்தின் முன்னிலைக்குப் பிரவேசிக்க வழிவகுக்கப்பட்டது. நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் தொடர்ந்தும் பின்னடைவு அபாயத்தை எதிர்கொண்ட கொவிட் - 19 தொற்றினால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளான ஆட்கள் பற்றி கவனம் செலுத்தப்பட்டது.

நகரக் குடியிருப்புக்களில் வியாபிக்கும் வைரஸ் நோய்கள், டெங்கு நோய் மற்றும் கொவிட் - 19 நோயைக் கட்டுப்படுத்தல் மற்றும் தடுப்பதற்காக கழிவுப்பொருள் முகாமைத்துவம், துப்பரவேற்பாடு மற்றும் துப்பரவேற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் சமுதாயத்தை விழிப்புணர்வூட்டல் மற்றும் அவர்களின் முனைப்பான பங்களிப்பை அதிகரிப்பதற்கான உபாயமுறைகள் மற்றும் இலக்கு நிகழ்ச்சித்திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டன. உயர் அபாயத்தைக் கொண்ட நகரக் குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களில் வியாபிக்கும் தொற்று நோய் நிலைமைக்கு பொது சுகாதாரம் மற்றும் சமூக நடைமுறைகளை மென்மேலும் நல்லமுறையில் பயிற்றுவிப்பதற்கு மற்றும் பின்பற்றுவதற்கு இந்த நிகழ்ச்சித்திட்டம் காரணமாக அமைந்தது.

வெற்றியின் பெறுபேறு 1



2021 யூன் மாதம் இலங்கையை பாதித்த பாதகமான வெள்ளத்தை அடுத்து, களனி கங்கை பெருக்கெடுத்ததன் காரணமாக கம்பஹா மாவட்டத்தில் ஆறுகளுக்கு அருகே வாழ்ந்த மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டார்கள். இந்த அனர்த்தத்திற்கான பதில் நடவடிக்கையாக கம்பஹா மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சமுதாயத்தினருக்கு அவசர நிவாரண உதவி வழங்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை முன்வந்தது. இதன் போது 400 குடும்பங்களுக்கு அவசர நிவாரண உதவி வழங்கப்பட்டது.

வெற்றியின் பெறுபேறு 2

"போதையற்ற குடியிருப்பு" நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் இரத்தினபுரி, மாதம்பே யூத் ஈகல் கழகம் ஒழுங்கு செய்திருந்த போதை எதிர்ப்பு மற்றும் ஏனைய போதைவஸ்து துர்நடத்தைகளை தடுப்பதற்கான பல நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் வியாபாரிகள் விழிப்புணர்வூட்டப்பட்டார்கள். இதன் பெறுபேறாக சிகரட் விற்பனை செய்யும் 47 வர்த்தக நிலையங்களில் 42 வர்த்தக நிலையங்களை அதனை நிறுத்தியுள்ளன.



உயர் மட்ட பெறுபேறு

- தெரிவு செய்யப்பட்ட 27 குடியிருப்புக்களில் சமூக பொருளாதார நிலைமை பற்றய 27 ஆய்வுகள் நடாத்தப்பட்டு தகவல்கள் திரட்டப்பட்டன.
- 27 குடியிருப்புக்களில் தாபிக்கப்பட்ட சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் செயற்பாடுகளை வலுவூட்டுவதற்கான தொழில்நுட்ப உதவி மற்றும் உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட்டன.
- போதைவஸ்து, மதுபானம் மற்றும் வேறு போதைக்காக பயன்படுத்தப்படும் அம்சங்கள் பற்றி அறிவுறுத்தல் மற்றும் தடுப்பது பற்றி ஆட்கள் 770 பேருக்காக 15 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- காசநோய்க்கு ஆளான 175 பேருக்கு அத்தியாவசிய போசனைப் பொருட்களுடன் காசநோய் மருந்துப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் 02 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- இலங்கையில் அமைந்துள்ள யுனிசெவ் நிறுவனத்துடன் இணைந்து கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் 3290 வீடுகளுக்கு கொவிட் 19 தடுத்தல் மற்றும் கட்டுப்பாடு பற்றி விழிப்புணர்வூட்டுவதற்கான 03 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- நகரக் குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களில் கொவிட் 19 தொற்றைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு உதவும் பொருட்டு நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் மேல் மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகங்கள் 21 இற்கு அத்தியாவசிய சுகாதார சேவைகள் வழங்கிவைக்கப்பட்டன.







- மாற்றுத்திறனாளிகளான 47 பேருக்கு அவர்களின் தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்குத் அத்தியாவசியமான சுகாதார உபகரணங்களைப் பெற்றுக் கொடுக்கும் 10 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- செவிப்புலனற்றவர்களுக்கு செவிப்புலன் உபகரணங்கள் 08 வழங்கிவைக்கப்பட்டன.
- தாய் அரவணைப்பை மேம்படுத்தல் மற்றும் புதிதாக பிறந்த சிசுக்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் தாய்மார் 106 பேருக்கு 17 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- டெங்கு ஒழிப்பு பற்றி அறிவுறுத்துவதற்காக 05 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 400 குடும்பங்களுக்கு அவசர நிவாரண உதவிகள் வழங்கிவைக்கப்பட்டன.





ஞீ 1.1: குடியிருப்புகளின் தேவைகளை இனங்காணல்



ரூ 1.2: சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் நிலைபேறான செயற்பாட்டுக்கு சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களை வலுவூட்டல் 27 இன் தேவைகளை இனங்காணல்





ஸ்ரீ 1.3: போதைவஸ்து மற்றும் போதைப்பொருட்களின் முறையற்ற பயன்பாட்டை தடுத்தல் மற்றும் புனர்வாழ்வளித்தல்



ஸ்ரீ 1.4: சமுதாய சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்





சௌபாக்யா சவிபல – சமுதாயத்தை பொருளாதார ரீதியாக வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம

சுயதொழல்வாய்ப்பு மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி மூலம் சமுதாயத்தினரின் பொருளாதார நல்ல நிலைத்திருத்தலை மேம்படுத்தும் நோக்கத்துடன் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை, 2012 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் 379 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதில் பங்கேற்றது.


புதிய வியாபாரமொன்றை ஆரம்பிக்க அல்லது தற்போதுள்ள வியாபாரத்தை விஸ்தரிப்பதற்குத் தேவையான தொழில்முயற்சியாளர்களுக்கு சிறு வியாபார மேம்பாட்டுக்கான நிவாரண குறைந்த வட்டி வீதத்தின் கீழ் சுயசக்தி கடன் வழங்கப்பட்டது. நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களில் சிறு அளவிலான வியாபாரங்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

வெற்றியின் பெறுபேறு 3:



சுய தொழில்வாய்ப்பு மற்றும் தொழில்முயற்சிசார் அபிவிருத்தியின் மூலம் நகரக் குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களில் சமுதாயத்தினரின் பொருளாதார நல்ல நிலைத்திருத்தலின் ஒரு அம்சமாக நிலைபேறான வருமானத்திற்கு தொழில்முயற்சிசார் அபிவிருத்தி பற்றிய அவர்களின் அறிவை வலுவூட்டல் மற்றும் மேம்படுத்துவதற்கு புதிய மற்றும் தற்போதுள்ள நுண், சிறிய அளவிலான தொழில்முயற்சிசார் ஆற்றல்களை மேம்படுத்த நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை மேற்கொள்கின்றது

திருகோணமலை, கம்பஹா, கொழும்பு, காலி, குருநாகல், மாத்தறை, நுவரெலியா, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களிலுள்ள தொழில்முயற்சியாளர்கள் 628 பேருக்கு தொழில்முயற்சிசார் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக அவர்களின் ஆற்றல்களை மேம்படுத்திக் கொள்ளும் 14 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.



வெற்றியின் பெறுபேறு 4:



கொவிட் - 19 தொற்றுநோய் பரவல் சமூக-பொருளாதார ரீதியில் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்ற குறிப்பாக குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களில் வாழும் மக்களில் தாக்கத்தை ஏற்படுத்தியது. நிலவுத் தொற்று வியாபித்தல் காரணமாக சுயதொழில்முயற்சியாளர்களுக்கு தமது உற்பத்திகளை விற்பனை செய்துகொள்ள வழியின்றி பல்வேறு தடைகளுக்கு முகம் கொடுத்தார்கள்.

இதன் போது மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 2.2 உப நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ராகம பிரதேசத்தில் வசிக்கும் திருமதி தயா மல்லிகாவுக்கு அவரின் உற்பத்திகளான பழச்சாறு மற்றும் சமைத்த உணவுப்





பொதிகளை மஹபாகே சந்தியில் விற்பனை செய்வதற்கான நடமாடும் வண்டியொன்று பெற்றுக் கொடுக்கப்பட்டது. இதன் மூலம் பயனாளிக்கு உற்பத்திகளை விற்பனை செய்வதற்கென குறிப்பான இடமொன்று பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன், கூடுதலான நுகர்வோரை பெற்றுக் கொள்வதற்கும் தமது உற்பத்திகளை காட்சிப்படுத்துவதற்கும், அவரின் சந்தை வாய்ப்பை விஸ்தரிப்பதற்கும் வாய்ப்புக் கிடைத்தது.

உயர்மட்ட பெறுபேறுகள்

- புதிய உற்பத்திகள், சேவைகள், சந்தைகள், புதிய தொழில்நுட்பத்திற்கும், உற்பத்தி முறைகளை பின்பற்றுவதற்குமான பயிற்சியளித்தல் மற்றும் விழிப்புணர்வூட்டல் வழிமுறைகளின் மூலம் புதிய மற்றும் தற்போதுள்ள தொழில்முயற்சியாளர்கள் 628 பேர் உருவாக்கப்பட்டார்கள்.
- தொழில்முயற்சியாளர்கள் ஊடாக நகரக் குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களில் வாழும் சமுதாயத்தினர் மத்தியில் நுண், சிறிய அளவிலான தொழில்முயற்சியாளர்களின் ஆற்றல்களை மேம்படுத்தும் 14 செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.
- தொழில்முயற்சியாளர்கள் 254 பேருக்கு சந்தை வாய்ப்புக்கள் உருவாக்கிக் கொடுக்கப்பட்டன.
- தொழில்முயற்சியாளர்கள் 16 பேருக்கு சுயசக்தி கடன் திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்பட்டது.
- தொழில்முயற்சியாளர்கள் 20 பேருக்கு உற்பத்திகளை விற்பனை செய்வதற்கு நடமாடும் வண்டிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.
- நுண், சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு மென்மேலும் சிறந்த சந்தைவாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்காக தமது உற்பத்திகளை காட்சிப்படுத்துவதற்கு உணவு மற்றும் சந்தைக் கண்காட்சிகள் 10 நடாத்தப்பட்டன.



SS 2.2: புதிய மற்றும் தற்போதுள்ள சிறிய அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு நிதி உதவி மற்றும் உபகரணம் பெற்றுக் கொடுத்தல்





SS 2.1: சிறிய அளவிலான தொழில்முயற்சியாளர்களை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செலமர்வுகளை நடாத்தியமை



SS 2.3: சிறிய அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு சந்தை வாய்ப்புக்களை அறிமுகம் செய்தல





சௌபாக்யா நெனபல –
கல்விசார் ரீதியாக வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் இளைஞர், யுவதிகளுக்கு தொழில்சார் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதில் பங்கேற்றுள்ளதுடன், 18 - 30 வயதுக்கு இடைப்பட்ட 332 பேருக்கு அவ்வாறு உதவி வழங்கப்பட்டுள்ளது.

நகரக் குடியிருப்புக்களில் வாழும் சமுதாயத்தினருக்கு அபிவிருத்தி செயன்முறையில் பங்கேற்கத் தேவையான வழிகாட்டல் மற்றும் ஊக்குவிப்பை நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை பெற்றுக் கொடுப்பதன் மூலம் 2021 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்ப்ட பிரதேசங்களின் இளைஞர் கழகங்கள் மற்றும் சிறுவர் கழகங்களைத் தாபிக்கவும் எமது அதிகாரசபை உதவி வழங்கியுள்ளது. பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்கள் மற்றும் சிறுவர் கழகங்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டிலும் பார்க்க அதிகரித்துள்ளதுடன், தெரிவு செய்யப்பட்ட இலக்குப் பிரதேசங்களில் கூடுதல் அச்சுறுத்தலான நிலையிலுள்ள பிள்ளைகள் மற்றும் இளைஞர்களை ஊக்குவித்து அதற்கான சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களுடன் இணைந்து இளைஞர்கள் மற்றும் சிறுவர் கழகங்களை தாபிக்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை அவர்களுக்கு பலம்சேர்த்துள்ளது.

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் 2021 ஆம் ஆண்டு பாடசாலை உபகரணங்கள் பெற்றுக் கொள்ள முடியாது போன சிறுவர்கள் 571 பேருக்கு அவர்களின் கல்வித் தேவைகளுக்கு அமைய அத்தியாவசியமான எழுதுகருவிகள் மற்றும் பாடசாலை உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்து உதவியுள்ளது. 2021 ஆம் ஆண்டளவில் சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த சிறுவர் கழகங்களின் எண்ணிக்கை 29 ஆகும்.

கொவிட் 19 தொற்றுநோய் பரவிவந்த போது உலகம் முழுவதிலும் பாடசாலைகள் மூடப்பட்ட காலத்தில், சிறுவர்கள் உலகில் கல்வி பயில்வதில் நெருக்கடி நிலையை எதிர்கொண்டார்கள். 2021 ஆம் அண்டு

கொவிட தொற்று நோய் காரணமாக நாடு முடக்கப்பட்ட காலப்பகுதியில் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஒன்லையின் முறையில் மேலதிக உதவி வகுப்புகள் ஊடாக கற்கை நடவடிக்கைகளை தொடர்ச்சியாக பேணிவருவதை உறுதி செய்வதற்கான புதிய முறைகளை இனங்கண்டது. குறைந்த சிறப்புரிமைகளைக் கொண்ட பாடசாலைகளில் தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் நோக்கத்துடன் 4 மாவட்டங்களில் இனங்காணப்பட்ட 6 பாடசாலைகளுக்கு தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் வள நிலையங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. தொழில்சார் வழிகாட்டல், தொழில் பயிற்சி மற்றும் தலைமைத்துவம் பற்றிய திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், எச்ஐவீ, எயிட்ஸ் உள்ளிட்ட சமூக பொறுப்பு மற்றும் சமூக சகவாழ்வு, இனப்பெருக்க சுகாதாரம் மற்றும் போதைவஸ்துக்கள், மதுபானம் பற்றி விழிப்புணர்வூட்டல் என்பவற்றை உள்ளடக்கிய செயற்பாடுகளின் பொது நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை தொழல்சார் எதிர்பார்ப்புக்களை கட்டியெழுப்புவதற்கான இளைஞர் திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி வாய்ப்புக்கள் 583 ஐ பெற்றுக் கொடுத்துள்ளது.

வெற்றியின் பெறுபேறு 5:



களனி கங்கையைச் சூழவுள்ள குடியிருப்பில் சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் முதற் தடவையாக "களனி கெகுல" சிறுவர் கழகம் என்ற பெயரில் சிறுவர் கழகமொன்று தாபிக்கப்பட்டது. தற்போது இச்சிறுவர் கழகத்திலுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை 35 பேராகும்.

2021 ஆம் ஆண்டு நடைபெற்ற சமுதாய தலைவர் விருது வழங்கும் நிகழ்வின் போது சிறுவர் கழக சிறுமியர்கள் பத்து பேர் "உடவெடியா மலே" கீதத்திற்கு ஆக்கபூர்வமான நடனமொன்றை சமர்ப்பித்தார்கள். இப்பிள்ளைகளுக்கு பொது மேடையொன்றில் நடனமாடும் வாய்ப்பு கிடைத்திருப்பது இதுவே முதற் தடவையாகும். 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற உலக குடியிருப்புத் தின விருது வழங்கும் விழாவில் நடனமாடும் வாய்ப்பும் அவர்களுக்குக் கிடைத்தது. குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களைச் சேர்ந்த சிறு குழந்தைகளுக்கு அவர்களின் அழகியற்கலை திறமைகளை காட்சிப்படுத்தும் வாய்ப்பை அவர்கள் பெற்றுக் கொண்டமை பாரிய வெற்றியொன்றாகும்.

உயர் பெறுபேறுகள்:

- நகரக் குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களில் வாழும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் பாடசாலையிலிருந்து வெளியேறியுள்ள சிறுவர்கள் 06 பேரின் கற்கை நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல உதவி வழங்கப்பட்டது.
- 4 மாவட்டங்களில் நகர, குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களில், பாடசாலை வள நிலையங்கள் 06 தாபிக்கப்பட்டன.
- திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி பற்றி நடாத்தப்பட்ட ஒன்லையின் முறையிலான மற்றும் ஆட்களுக்கான 26 செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.
- 05 பாலர் பாடசாலைகளுக்கு பயன்கள் கிடைக்கும் வகையில் பாலர் பாடசாலை உபகரணங்கள் 243 பெற்றுக் கொடுக்கப்பட்டன.
- 4 குடியிருப்புக்களில் 04 நூல் நிலையங்கள் தாபிக்கப்பட்டன.
- ஆரம்பக் கல்வியை தொடர்ச்சியாக பேணிவருவதை ஊக்குவிப்பதற்காக சிறுவர்கள் 571 பேருக்கு அத்தியாவசிய பாடசாலை உபகரணம், எழுதுகருவிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.
- கொவிட் 19 தொற்று நோய்க் காலத்தில் அன்றாடம் பாடசாலை பாடங்களுக்கு உதவுவதற்கான ஒன்லையின் செயலமர்வுகள் 10 நடாத்தப்பட்டன.
- தாபிக்கப்பட்ட, வலுவூட்டப்பட்ட சிறுவர் கழகங்கள் 14 இன் மூலம் அச்சமுதாயத்தினருக்கு அபிவிருத்தியில் தனியான நிலைத்திருத்தலுடன் இடையீட்டுச் செயற்பாடுகளை மேற்கொள்ள, நவீனமயப்படுத்த மற்றும் பங்கேற்க வாய்ப்பளிக்கப்பட்டது.
- இளைஞர்கள் 1223 பேருக்கு தொழில் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்திக்கான உதவிப் பிரவேசம் பெற்றுக் கொடுக்கப்பட்டது.







SN 3.1: இளைஞர்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல்



SN 3.2: குறைந்த சிறப்புரிமைகளைப் பெற்றுள்ள பாடசாலைகளுக்கு சமுதாய வள நிலையங்களைத் தாபித்தல்







SN 3.3: திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி பற்றிய செயலமர்வை நடாத்தல்

சௌபாய்கா திவிவருன -

சமய மற்றும் கலாசார வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டம்

2021 ஆம் ஆண்டு நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் பல்வேறு சமுதாயத்தினருக்கும் மத்தியில் சமூக சகவாழ்வை மேம்படுத்துவதற்காக 1380 குடும்பங்களுக்கு பல்கலாசார மற்றும் பல்சமய செயற்பாடுகளை ஒழுங்கு செய்ய வசதிகள் செய்துகொடுக்கப்பட்டு நகரக் குறைந்த வசதிகளைக் கொண்ட சமுதாயத்தினருக்கு இடையே பல்சமய மற்றும் பல்கலாசார நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. 2021 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட குடியிருப்புக்களைச் சேர்ந்த சிறுவர்கள் 446 பேருக்கு அத்தியாவசிய உபகரணங்களுடன் அறநெறிப் பாடசாலை கல்வியில் அவர்களை ஈடுபடுத்தி ஊக்குவிக்கப்பட்டார்கள். கொவிட் 19 தொற்றுநோய் காலப்பகுதியில் நகர்ப்புற குடியிருப்புக்களில் வாழும் அழகியற்கலை திறமைகளைக் கொண்டுள்ள சிறுவர்கள் 628 பேருக்கு அதற்கான ஊக்குவிப்பு வழங்கப்பட்டது.

நகர்ப்புறப் பிரதேசங்களில் குறைந்த வருமான குடியிருப்புக்களில் வாழும் ஆட்களுக்கு தொற்றுநோய்க் காலப்பகுதியில் சவால்மிக்க நிலைமைக்கு முகம்கொடுக்க வேண்டிய ஏற்படுவது தொடர்பில் கொவிட் 19 முக்கியமாக தாக்கத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக, எதிர்கால தாய்மாரிலும் நேரடியாக தாக்கம் செலுத்தியது. தனியாக, அழுத்தம் மற்றும் விரக்தியைக் குறைக்கும் நோக்கத்துடன் கர்ப்பிணித் தாய்மார் ம்றறும் ஏனைய சமுதாய உறுப்பினர்கள் 560 பேருக்கு 12 செயலமர்வுகள் ஊடாக ஆலோசனை மற்றும் உளவியல் சமூக உதவிகள் பற்றிய பற்றிய மற்றும் அறிவுறுத்தல்களும் பெற்றுக் கொடுக்கப்பட்டன. இலங்கையில் அமைந்துள்ள உலக சுகாதார அமைப்பின் ஒத்துதழைப்புடன் பதவியணியினர் 30 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

வெற்றியின் பெறுபேறு 6

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் கொவிட் 19 தொற்று நோய்க்கு மத்தியில் கர்ப்பிணித் தாய்மாருக்கு உளவியல், சமூக சுகாதார சேவை வசதிகளைக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உதவுவதன் மூலம் தாய் மற்றும் புதிதாக பிறந்த சிசுக்களின் அரவணைப்பை வலுவூட்டல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. சௌபாக்யா திவிவருன நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ணழழஅ தொழில்நுட்பம் ஊடாக 16 மாவட்டங்களில் 27 குடியிருப்புக்களில் குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களில் வாழும் கர்ப்பிணித் தாய்மாருக்கு நல்ல நிலைத்திருத்தலுக்கான விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

"இது நாடு முடக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் மேற்கொள்ளப்படுகின்ற மிகச் சிறந்த நிகழ்ச்சித்திட்டமாகும்"
டீ.எம்.எஸ். தரங்கனீ ரீ மதவாச்சி

"நாம் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் பல விடயங்களை கற்றுக் கொண்டோம்"
ரலஜயபுர, ரத்கம, காலி

உயர்மட்ட பெறுபேறு

- சமுதாயங்களுக்கு இடையே இனங்களுக்கு இடையிலான ஒற்றுமையை போசிப்பதற்காக 752 குடும்பங்களின் பங்கேற்புடன் பல்சமய நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- அத்தியாவசிய உபகரணங்களுடன் அறநெறிப் பாடசாலை கல்விக்கு சிறுவர்கள் 446 பேரை வழிப்படுத்தி ஊக்குவிக்கப்பட்டார்கள்.
- பல்வேறு சமூகங்களுக்கும் இடையே சகவாழ்வை மேம்படுத்துவதற்காக நடாத்தப்படும் அமர்வுகளைக் கொண்டதாக பல்சமய நிகழ்ச்சித்திட்டங்கள் 17 நடாத்தப்பட்டன.
- ஆக்கபூர்வமானதன்மை மற்றும் அழகியற்கலை திறமைகளை மேம்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பதற்கு ஆட்கள் 628 பேரின் பங்கேற்புடன் பல்கலாசார நிகழ்ச்சித்திட்டங்கள் 13 நடாத்தப்பட்டன.
- நகரக் குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களில் வாழும் குறைந்த வருமானம் பெறும் 560 பேருக்கு உலக சுகாதார அமைப்பின் இலங்கையிலுள்ள நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் உளவியல் - சமூக சுகாதார பாதுகாப்பு அறிவுடன் உளவியல் சுகாதார உதவிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.
- உலக சுகாதார அமைப்பின் இலங்கையிலுள்ள அமைப்பின் ஒத்துழைப்புடன் ஆலோசனை மற்றும் உளவியல் சமூக உதவி பற்றி விழிப்புணர்வூட்டும் 12 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.





SD 4.1: பல்சமய மற்றும் கலாசார செயற்பாடுகளைக் கொண்ட நிகழ்ச்சித்திட்டம்









SD 4.2: உளவியல் சமூக உதவி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்

2021 உலகக் குடியிருப்புத் தினக் கொண்டாட்டத்தை முன்னிட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்




உலகக் குடியிருப்புத் தினம் ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதம் முதலாவது திங்கட்கிழமை கொண்டாடப்படுகின்றது. இந்த சந்தர்ப்பமானது மனிதக் குடியிருப்புக்களின் நிலைமை மற்றும் அதில் வாழும் மக்களுக்குப் போதியளவு இருப்பிட வசதிகளுக்கு சகலருக்கும் உள்ள உரிமை பற்றி பிரதானமாக கவனம் செலுத்துகின்றது. இந்த ஆண்டில் உலகக் குடியிருப்புத் தினம் 2021 அக்டோபர் மாதம் 4 ஆம் திகதி திங்கட்கிழமை கொண்டாடப்பட்டது. நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை நாடு முழுவதிலும் 25 மாவட்டங்களிலும் நகர, குறைந்த வசதிகள் கொண்ட சமுதாயத்தினரை மையமாகக் கொண்டு "காபனற்ற உலகிற்கு நகரச் செயற்பாடுகளை துரிதப்படுத்தல்" எனும் தொணிப்பொருளை மையமாகக் கொண்ட செயற்பாடுகளை மேற்கொண்டது. 2021 உலகக் குடியிருப்பு தினத்தை முன்னிட்டு மூன்று பிரிவுகளின் கீழ் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.


I. சிறுவர் சித்திரப் போட்டி (வயது 6-9, வயது 10-14, வயது 15-18 ஆகிய 3 பிரிவுகள்)

II. திறந்த புதிர் போட்டி

III. நுண், சிறிய, நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கான வர்த்தகக் கண்காட்சி









உயர்மட்ட பெறுபேறுகள

- சித்திரப் போட்டிக்கு 3000 ஆக்கங்கள் கிடைத்தன.
- கலைசார் திறமைகளை மென்மேலும் ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு பிரிவிலிருந்தும் வெற்றிபெற்றவர்கள் 9 பேர் தெரிவு செய்யப்பட்டார்கள்.
- உணவு மற்றும் வர்த்தக கண்காட்சியில் நுண், சிறிய அளவிலான தொழில்முயற்சியாளர்கள் 74 பேர் கலந்துகொண்டார்கள்.
- உணவு மற்றும் வர்த்தக தொகுதிகளில் நுண், சிறிய, நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள் 06 பேர் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டு பணப் பரிசும் வழங்கிவைக்கப்பட்டது.













நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையில் உள்ளக நிதியமொன்றை தாபித்தல்

2021 ஆம் ஆண்டில் பெற்றுக் கொண்ட வெற்றிகள்

கடந்த சில ஆண்டுகளில் தீர்த்துக் கொள்ளக்கூடியதாக காணப்பட்ட சிக்கலொன்றான நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையில் உள்ளக நிதியமொன்றை தாபிப்பது தொடர்பில் தற்போது தீர்வொன்றைப் பெற்றுக் கொள்ள முடிந்தமை 2021 ஆம் ஆண்டு பெற்றுக் கொண்ட மற்றொரு வெற்றியாகும்.

கடந்த சில ஆண்டுகளில் தீர்த்துக் கொள்ளக்கூடியதாக காணப்பட்ட சிக்கலொன்றான நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையில் உள்ளக நிதியமொன்றை தாபிப்பது தொடர்பில் தற்போது தீர்வொன்றைப் பெற்றுக் கொள்ள முடிந்தமை 2021 ஆம் ஆண்டு பெற்றுக் கொண்ட மற்றொரு வெற்றியாகும்.

இதற்கான ஆரம்ப கட்டப் பணியாக அதிகாரசபையை அமைத்துருவாக்கிய சட்டத்தின் 11 ஆம் பகுதியில் 16 ஆம் இலக்கத்திற்கு இசைவாக உள்ளக நிதியம் தொடர்பில் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையில் குழுவொன்றைத் தாபித்து அதிகாரசபைக்கு உள்ளக நிதிக் கொள்கையொன்று தயார் செய்யப்பட்டது.

பின்னர் அதிகாரசபையின் உள்ளக நிதியம் தொடர்பில் அரசாங்க நிதிகள திணைக்களத்திடம் வினவப்பட்டதுடன், அதற்குப் பதிலளிக்கும் வகையில் நிதி அமைச்சின் சட்ட அலுவல்கள் திணைக்களத்திடம் வினவி அதற்கமைய சட்ட நடவடிக்கைகளை திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அவதானிப்புக்களுக்கு அமைய அரசாங்க நிதிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் 2008 இன் 36 ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய அதிகாரசபைக்கு நிதியமொன்றைத் தாபித்துக் கொள்ள முடிந்தது

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்



நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் பிரகடனம் செய்யப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு அமைய இனங்காணப்பட்டுள்ள குறைந்த வசதிகளைக் கொண்ட நகரக் குடியிருப்பு சமுதாயத்தினருக்கு நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் பௌதீக அபிவிருத்தி மற்றும் மனித அபிவிருத்தி நோக்கத்துடன் அமுல்படுத்தப்பட்ட, அமுல்படுத்தப்பட்டு வருகின்ற மற்றும் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பல கருத்திட்டங்கள் காணப்படுகின்றன.

எனவே மிகப் பரந்தளவில் இந்த அபிவிருத்திக் கருத்திட்டங்களை அமுல்படுத்த நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் உத்தேச பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு அமைய தேசிய மட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட நகரக் குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டம் தொடர்பில் சமூக, பொருளாதார ஆய்வுக்குரிய தகவல்கள் 2021.12.31 ஆம்

திகதியளவில் பிரதேச செயலகங்கள் 208 இடமிருந்து கிடைத்துள்ளதுடன், இது 96மூ சதவீதமாகும்.


நாடளாவிய வீடமைப்பு மற்றும் சமூக பொருளாதார ஆய்வு

இந்த நாடளாவிய ஆய்வின் போது குறைந்த வருமானம் பெறும் வீட்டு அலகுகளின் தன்மைக்கு அமைய குடிசை, சேரி, இணைந்த வீடுகள், தரமற்ற பரந்துள்ள வீடுகள், கடும் அச்சுறுத்தலான பிரதேசங்களிலுள்ள வீடுகள் மற்றும் ஏனைய வீடுகள் என்ற வகையில் வீடுகள் ஆறு வகைகளாக வகைப்படுத்தப்பட்டன. அதற்கமைய பிரதேச செயலகங்களிடமிருந்து நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு கிடைத்துள்ள தரவுகளுக்கு அமைய பொழிப்பாக இணைந்த வரிசை வீட்டு அலகுகளின் எண்ணிக்கை 29மூ ஆகவும், வேறு வீட்டு அலகுகளின் எண்ணிக்கை 27மூ ஆகவும தரப்படுத்தப்படாத பரந்து காணப்படுகின்ற வீடுகள், கடும்

அச்சுறுத்தலான பிரதேசங்களிலுள்ள வீடுகள், குடிசை வீடுகள் விகிதமாக முறையே, 18மூ, 12மூ மற்றும் 12மூ ஆகவும் குறைந்த வருமானம் பெறும் வீடகளில் சிறு எண்ணிக்கை சேரி வீடுகளாகவும் உள்ளதுடன் அவை விகிதமாக 2மூ ஆகவும் உள்ளன.

மேலும் பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து கிடைத்துள்ள காணிகள் பற்றிய தகவல்களின் அடிப்படையில் எதிர்காலத்தில் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள வீடமைப்புக் கருத்திட்டங்களுக்கு உகந்த காணிகள் காணப்படுகின்றனவா என்பதும் ஆராயப்பட்டு வருவதுடன், நகரக்

குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் அமுல்படுத்தப்பட்டுள்ள வெலிசர ஹைட்ஸ் நடுத்தர வருமானம் பெறுவோருக்கான




வீடமைப்புக் கருத்திட்டத்திற்குக் காணப்படுகின்ற காணியும் இந்த நாடளாவிய ஆய்வின் பெறுபேறாகும்.

இதற்கு மேலதிகமாக இந்த ஆய்வின் மூலம் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குக் கிடைத்துள்ள சகல தரவுகளையும் களஞ்சியப்படுத்தும் செயன்முறையாக தரவு முகாமைத்துவ முறைமையும் (னுயவய ஆயயெபநஅநவெ ளுலளவநஅ) தயார் செய்யப்பட்டது.

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவினால் அரச மற்றும் தனியார் துறையின் அபிவிருத்தியாளர்களினால் அமுல்படுத்தப்படுகின்ற நிர்மாணிப்பு பூர்த்தி செய்யப்பட்ட அல்லது நிர்மாணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கூட்டாட்சி வீடமைப்புக் கருத்திட்டங்களின் தகவல்களை சேகரிப்பதற்கு இந்தக் கூட்டாட்சி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.


இதற்காக நாடளாவிய ரீதியில் அரச மற்றும் தனியார் துறையின் அபிவிருத்தியாளர்கள் 173





பேரின் தரவுகள் சேகரிக்கப்பட்டதுடன், பல்வடிவ தொடர்பாடல் முறைகளைப பயன்படுத்தி 03

பகுதிகளைக் கொண்டதாக 01. அடிப்படைத் தகவல்களைப் பெற்றுக் கொள்ளல், 01. வீடமைப்புக் கருத்திட்டங்களின் பண்புகள், 03. கொள்வனவாளர்களுக்கு நிவாரண பயன்களைப் பெற்றுக் கொடுத்தல் ஆகிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த கேள்விக்கொத்து தயார் செய்யப்பட்டது.

மேற்படி தரவுகளை அடிப்படையாகக் கொண்டு வீடமைப்புக் கருத்திட்டங்களில் 93மூ ஆனவை கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ளதுடன், இவற்றில் 60மூ ஆனவை 13 - 62 இடைப்பட்ட வீட்டு அலகுகளை கொண்டுள்ளன என்பதும், மேற்படி வீட்டு அலகுகளில் ரூ.மி. 11 - 15 இடையே விற்பனை விலை தீர்மானிக்கப்படுகின்றது என்றும் இவற்றில் 24மூ ஆனவை வீடமைப்பு அபிவிருத்தி நிறுவனங்களினால் வீட்டு அலகுகளுக்கு கொடுப்பனவு செலுத்த வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது என்றும் உறுதி செய்துகொள்ளப்பட்டது.







மனிதவள அபிவிருத்தி மற்றும் நிறுவன முகாமைத்துவ அபிவிருத்தி நடவடிக்கைகள்

2021.12.31 ஆம் திகதி வரை அமுல்படுத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள

பாடநெறி	நிறுவனத்தின் பெயர்	பாடநெறிக் காலஎல்லை	துறை	பங்கேற்ற அலுவலர்களின் எண்ணிக்கை
Leaders for Tomorrow	திறன் அபிவிருத்தி நிதியம்	ஒரு நாள் செயலமர்வு	ஊடகப் பிரிவு மற்றும் நிர்மாணப் பிரிவு	03
Advanced Microsoft Excel Training for Data Analysis	திறன் அபிவிருத்தி நிதியம்	03 நாள்	ஊடகப் பிரிவு, தவிசாளர் அலுவலகம், திடமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு	04
அரச அலுவலர்களின் சம்பளங்களை தயார் செய்தல்	தேசிய ஊழியக் கற்கை நிறுவகம்	ஒரு நாள் செயலமர்வு	கணக்குகள் பிரிவு	02
கோப்பிடல் முறை	தேசிய ஊழியக் கற்கை நிறுவகம்	ஒரு நாள் செயலமர்வு	நிருவாகப் பிரிவு	07
தொழில் வாழ்க்கையின் வெற்றிக்கு வளர்த்துக் கொள்ள வேண்டிய தலைமைத்துவப் பண்புகள்	தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம்	ஒரு நாள் செயலமர்வு	நடுத்தர வகுப்பினர் வீடமைப்புக் கருத்திட்ட அலகு, ஊடகப் பிரிவு மற்றும் அறவீட்டுப் பிரிவு	04
கூட்ட முகாமைத்துவ திறன்முறை	தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம்	ஒரு நாள் செயலமர்வு	நடுத்தர வகுப்பினர் வீடமைப்புக் கருத்திட்ட அலகு மற்றும் ஊடகப் பிரிவு	03
Energy Management in High- rise Building	ICTAD	ஒரு நாள் செயலமர்வு	பொறியியல் பிரிவு மற்றும் நடுத்தர வகுப்பினர் வீடமைப்புக் கருத்திட்ட அலகு	07
Sustainability of Standard Bidding Documents, Procurement Guidelines Manual 2006 to avoid delays issues and constraints in Construction Contract Administration	ICTAD	ஒரு நாள் செயலமர்வு	பொறியியல் பிரிவு மற்றும் நடுத்தர வகுப்பினர் வீடமைப்புக் கருத்திட்ட அலகு	07

1. Leaders for tomorrow

திறன் அபிவிருத்தி நிதியத்தினால் அமுல்படுத்தப்பட்ட டுநயனநசள கழச வழஅழசசழற பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்லையின் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஒரு நாள் பயிற்சிச் செயலமர்வாகும்.

இந்த நிகழ்ச்சித்திட்டம் 2021 செப்தெம்பர் மாதம் 22 ஆம் திகதி நடாத்தப்பட்டதுடன், எமது அதிகாரசபையின் ஊடகப் பிரிவின் அலுவலர்கள் இருவர் மற்றும் அறவீட்டுப் பிரிவின் ஒரு அலுவலர் உட்பட அலுவலர்கள் மூவர் இதில் பங்கேற்றார்கள்.

தலைமைத்துவ வகிபாகம், சவால்களுக்கு மத்தியில் தலைமைத்துவம், விளைதிறன்மிக்க சிந்தனை மற்றும் அலுவலக நடவடிக்கைமுறை, ஆளுமை விருத்தி மற்றும் நேர முகாமைத்துவம் பற்றிய சிறந்த புரிந்துணர்வைப்

பெற்றுக் கொடுப்பது இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

அதற்கமைய ஊழியர்களின் ஆளுமையை மேம்படுத்தல் மற்றும் சவால்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுத்து தமது தலைமைத்துவ பண்புகளை சுயமாக வளர்த்துக் கொள்ளத் தேவையான அறிவு மற்றும் திறமைகளை மேம்படுத்திக் கொள்ள வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுப்பது இந்த அலுவலர்களை குறித்த பயிற்சியில் ஈடுபடுத்தியதன் முக்கிய நோக்கமாகும்.

2. Advanced Microsoft Excel Training for Data Analysis:

விடயரீதியான அறிவு மற்றும் தொழில்நுட்ப அறிவு வினைத்திறன்மிக்கவாறு சேவையாற்றும் போது அத்தியாவசியமான பண்புகளாகும். இந்த விடயத்தை அடிப்படையாகக் கொண்டு பதவியணியினருக்கு உரித்தான விடய அறிவு மற்றும் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்திக் கொள்வதற்குத் தேவையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் அலுவலர்களை ஈடுபடுத்துவது எமது அதிகாரசபையின் பரந்தளவிலான நோக்கங்களை அடைந்துகொள்வதில் முக்கிய அம்சமாகும்.

இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தரவுப் பகுப்பாய்வு மற்றும் மைக்ரோசொவ்ட் எக்செல் (ஆஉஎசழளழகவ நுஒஉநட) மென்பொருளைப் பயன்படுத்துவது பற்றிய அறிவை இற்றைப்படுத்தல் மற்றும் புதிய அறிவைப் பெற்றுக் கொடுப்பதற்காக திறன் அபிவிருத்தி நிதியத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட யுனஎயஎெநன ஆஉஎசழளழகவ நுஒஉநட வுசயஅைபெ கழச னயவய யுயெடலளளை எனும் பயிற்சிப் பாடநெறிக்கு எமது அதிகாரசபையின் ஊடகப் பிரிவின் அலுலவர்கள் இருவர், தவிசாளர் அலுவலகத்தின் அலுவலர் ஒருவர் மற்றும் திட்டமிடல், க.பிரிவின் அலுவலர் ஒருவர் உட்பட நான்கு பேர் பங்கேற்க வாய்ப்பளிக்கப்பட்டது.

3. அரச அலுவலர்களின் சம்பளங்களை தயார் செய்தல்:

யாராயினும் ஊழியர் ஒருவர் தமது சேவையை ஒரு நிறுவனத்திற்குப் பெற்றுக் கொடுப்பது மேற்படி சேவைக்குரிய வேதனத்தை பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடனாகும். அரச மற்று தனியார் ஆகிய எந்தத் துறையிலும் இது பொதுவான விடயமாகும். அரச துறை அலுவலர்கள் தொடர்பான வேதனங்களை செலுத்துவது முறையான செயன்முறை மற்றும் சட்டரீதியான சட்டகத்திற்கு அமைய மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த அறிவை அலுவலர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதை அடிப்படையாகக் கொண்டு தேசிய ஊழியக் கற்கை நிறுவகத்தினால் 2021 செப்தெம்பர் மாதம் 16 ஆம் திகதி அரச அலுவலர்களின் சம்பளங்களை தயார் செய்வது பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்லையின் தொழில்நுட்பம் ஊடாக மேற்கொள்ளப்பட்டது. எமது அதிகாரசபையின் கணக்குகள் பிரிவின் அலுவலர்கள் இருவர் இதில் பங்கேற்றார்கள். அரச அலுவலர்களின் சம்பளம் மற்றும் சம்பள அளவுத்திட்டம், வருடாந்த சம்பள ஏற்றங்களை செலுத்தல் மற்றும் மீளமைத்தல் முறை, சம்பளத் திருத்தம் மற்றும் பதில் கடமையாற்றுவதற்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் பற்றிய புரிந்துணர்வைப் பெற்றுக் கொடுப்பது இந்த செயலமர்வின் பிரதான நோக்கமாக இருந்தது.

4. கோப்பிடல் முறை

ஒரு நிறுவனத்தின் கடமைசார் ஆவணங்களை முறையாக பேணிவருதல் மற்றும் இற்றைப்படுத்துவதானது நிறுவன ரீதியில் முக்கியமான செயற்பணியொன்றாகும். ஒவ்வொரு விடயத்திற்கும் சமாந்தரமாக ஆவணக் கோப்புக்களைப் பேணிவருதல், ஒழுங்குமுறையில் மற்றும் முறையாக பாதுகாக்கக்கூடியவாறு குறித்த கோப்புக்களை பேணிவருவது பற்றிய அறிவு ஊழியர்கள் மத்தியில் காணப்பட வேண்டிய அத்தியாவசியமான பண்பொன்றாகும்.

அதற்கமைய, நிறுவனத்தில் விசேட செயற்பணியொன்றை ஆற்றும் பிரிவொன்றான நிருவாகப் பிரிவுக்கு புதிதாக நியமனம் பெற்றுள்ள அலுவலர்கள் 7 பேர் 2021.10.06 ஆம் திகதி தேசிய ஊழியக் கற்கை நிறுவகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கோப்பிடல் முறை பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்றார்கள்.

கோப்பிடலின் போது கவனம் செலுத்த வேண்டிய முக்கிய விடயங்கள், சரியாக கோப்பிடும் முறையொன்றின் பண்புகள், சரியாக பேணிவரப்படுகின்ற கோப்பின் பயன்கள், கோப்புக்களை வகைப்படுத்தல், கடிதங்களை தயார் செய்தல் மற்றும் குறிப்புக்களை எழுதுவது பற்றிய சரியான அறிவை பங்குபற்றுவோருக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

5. தொழில் வாழ்க்கையின் வெற்றிக்காக வளர்த்துக் கொள்ள வேண்டிய தலைமைத்துபப் பண்புகள்

ஒவ்வொரு அரச அலுவலருக்கும் இருக்க வேண்டிய அத்தியாவசிய பண்பொன்றாக தலைமைத்துவம் பற்றிய திறமையைக் குறிப்பிட முடியும். தொழில்சார் ரீதியாக வெற்றிகரமான நிலைமையை அடைவதற்கு இந்தப் பண்பின் பங்களிப்பு மிக உயர் மட்டத்தில் காணப்படுகின்றது.

நிறுவன ரீதியாக இடம்பெறுகின்ற எவ்வாறான நிலைமையிலும்கூட மோதல்களை முகாமைத்துவம் செய்துகொண்டு ஆளுமைக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு நடவடிக்கை மேற்கொள்ளும் ஆற்றல் தலைமைத்துவ திறமை மூலம் உரித்தாகின்றது. இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு 2021.08.17 ஆம் திகதி தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட தொழில்சார் வாழ்க்கையின் வெற்றிக்காக வளர்த்துக் கொள்ள வேண்டிய தலைமைத்துவ பண்புகள் பற்றிய பயிற்சிச் செயலமர்வில் எமது அதிகாரசபையின் நடுத்தர வகுப்பினருக்காக வீடமைப்புக் கருத்திட்டத்தைச் சேர்ந்த அலுவலர் ஒருவரும், ஊடகப் பிரிவின் அலுலவர்கள் இருவரும், அறவீட்டுப் பிரிவின் அலுவலர் ஒருவரும் பங்கேற்கச் செய்யப்பட்டார்கள்.

6. கூட்ட முகாமைத்துவத் திறன்முறைகள்

ஆளணி முகாமைத்துவம் மற்றும் கூட்ட முகாமைத்துவ ஆற்றல் எந்தவொரு அரச ஊழியரிடமும் இருக்க வேண்டிய கட்டாயப் பண்புகளாகும். பொது மக்களுக்காக வினைத்திறன்மிக்க சேவையை ஆற்றுவது அரச சேவையின் முன்னோடி நோக்கமாகும். நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையான எமது அதிகாரசபை கடமை மட்டத்தில் சமூக ரீதியான இடையீட்டுத் தொடர்புகளை மேற்கொள்வதை பிரதானமாகக் கொண்டுள்ளது. மேற்படி பணியின் போது கூட்ட முகாமைத்துவ அறிவு நிறுவன அலுவலர்களுக்கு மத்தியில் காணப்படுவது நிறுவனத்தின் நோக்கங்களை வெற்றிகரமாக்கிக் கொள்வதில் விசேட பங்களிப்பை வெளிப்படுத்துகின்றது என்பது உறுதியாகும்.

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகத்தினால் 2021.08.12 ஆம் திகதிய கூட்ட முகாமைத்துவ திறன் முறைகள் பற்றிய பயிற்சிச் செயலமர்வொன்று நடாத்தப்பட்டதுடன், மேலுள்ள விடயத்தை அடைந்துகொள்வதற்காக எமது அதிகாரசபையில் கடமையாற்றும் நடுத்தர வகுப்பு வீடமைப்புக் கருத்திட்ட அலகின் அலுவலர் ஒருவரும், ஊடகப் பிரிவின் அலுவலர் இருவரும் இதில் பங்கேற்கச் செய்யப்பட்டார்கள்.

i) Energy Management in High- rise Building

ii) Sustainability of Standard Bidding Documents, Procurement Guidelines

Manual 2006 to avoid delays issues and constraints in Construction Contract Administration

நிர்மாணத் துறை தொடர்பிலான தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக் கொடுப்பதை நோக்காகக் கொண்டு ஒழுங்கு செய்யப்படுகின்ற பயிற்சிச் செயலர்வுகளாக மேலே குறிப்பிடப்பட்ட செயலமர்வுகளைக் குறிப்பிட முடியும். இவற்றில்

(i) Energy Management in High- rise Building பயிற்சிச் செயலமர்வு 2021.09.28 ஆம் திகதி நடாத்தப்பட்டதுடன்,

(ii) Sustainability of Standard Bidding Documents, Procurement Guidelines பயிற்சிச் செயலமர்வு 2021.09.30 ஆம் திகதி நடாத்தப்பட்டது. எமது அதிகாரசபையின் பொறியியல் பிரிவு மற்றும் நடுத்தர வகுப்பு வீடமைப்புக் கருத்திட்ட அலகின் அலுவலர்கள் 07 பேர் இப்பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டார்கள் என்பதுடன், மேற்படி துறைகள் தொடர்பிலான தொழில்நுட்ப அறிவை வெற்றிகரகமாக குறித்த அலுவலர்களுக்குப் பெற்றுக் கொடுக்க முடிந்தமை நிறுவனத்தின் பணிகளை வெற்றிகரமாக்கிக் கொள்வதில் முக்கியத்துவம்வாய்ந்ததாக உள்ளது என்பதைக் குறிப்பிட முடியும்.

ஊழியர்களை தரப்படுத்துவதை மேற்கொள்ளல்

13 வருட காலம் அதிகாரசபையின் அலுலவர்களுக்குப் பெற்றுக் கொடுக்க முடியாது போன தரப்படுத்தலை 2021 ஆம் ஆண்டில் பெற்றுக் கொடுக்க இயலுமாயிற்று. அதற்கமைய நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பதவியணியின் சேவைக் காலத்திற்கு அமைய தரப்படுத்தலை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. ரீல் கம்பனி மற்றும் நகரக் குடியிருப்பு மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தில் கடமையாற்றிய பதவியணி மற்றும் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஆரம்பத்தில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பதவியணியின் சேவைக் காலத்தை மதிப்பீடு செய்வது இதன் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் மூலம் அதிகாரசபையின் அலுவலர்களுக்கு தமது பணிகளை திருப்திகரமாக மேற்கொள்ளும் அலுவலகச் சூழலை உருவாக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

ஊழியர்களை காலாண்டு அடிப்படையில் மதிப்பீடு செய்வதை அறிமுகம் செய்தல்

வருடாந்தம் ஊழியர்களை மதிப்பீடு செய்வதற்குப் பதிலாக காலாண்டு அடிப்படையில் சேவைகளை மதிப்பீடு செய்து காலாண்டின் மதிப்பீட்டுக்கு அமைய வருடாந்த மதிப்பீட்டை மேற்கொள்ளும் முறையியல் அறிமுகம் செய்யப்பட்டது. அதன் மூலம் ஊழியர்களில் முன்னேற்றமடைய வேண்டிய விடயங்கள் தொடர்பில் காலாண்டினுள் இனங்கண்டு அதற்குத் தேவையான பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் மனப்பாங்கு ரீதியான மாற்றங்களைச் செய்வதும் எதிர்பார்க்கப்படுகின்றது.


அதிகாரசபைக்கு புதிய அறவீட்டுப் பிரிவை ஏற்படுத்தல்


நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் அலுவலர்களை தெரிவு செய்துகொண்டு தாபிக்கப்பட்ட குழு 2020 ஆம் ஆண்டின் இறுதி வரை கடன் அறவிட்டுக் கொள்ளும் செயன்முறையில் ஈடுபட்டு வந்தது. நிறுவனத்தின் கடனை அறவிட்டுக் கொள்ளும் செயன்முறையை வலுவூட்டும் நோக்கத்துடன், மேற்படி செயன்முறைக்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் பிரிவொன்று அவசியமாயிற்று. அதன் பெறுபேறாக கடன் அறவிட்டுக் கொள்ளும் பிரிவு தாபிக்கப்பட்டது. தற்போது அதன் ஊழியர்களின் எண்ணிக்கை 11 ஆகும் என்பதுடன், அவர்கள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தெரிவு செய்துகொள்ளப்பட்ட ஊழியர்களாக உள்ளார்கள்.

அறவிட்டுக் கொள்ளும் பிரிவின் செயற்பாட்டுப் பொறிமுறை 10 படிமுறைகளைக் கொண்ட தொடர்ச்சியான செயன்முறையாக உள்ளது. இது பிரதானமாக சட்டப் பிரிவு மற்றும் காணிகள் மற்றும் ஆதன முகாமைத்துவப் பிரிவுடன் சம்பந்தப்பட்டதாக உள்ளது.

கடன் அறவிட்டுக் கொள்ளும் செயன்முறையின் போது சட்டரீதியல்லாத நடவடிக்கைகள் ஆரம்பத்திலும், சட்டரீதியான நடவடிக்கைகைகள் பின்னரும் உள்ளடங்கும்.

வீடமைப்புத் தேவைகளைக் கொண்டுள்ள நகர்ப்புற சமுதாயத்தினருக்கு வழங்கக்படுகின்ற கடன் (வீடமைப்புக் கடன்) மற்றும் தொழில்முயற்சிக்கான கடன் என்ற வகையில் (தொழில்முயற்சி அபிவிருத்திக் கடன்) இரு வகையான கடன்கள் கடன் கோப்புகளில் உள்ளடங்கும். வீடமைப்புக் கடன் பிரதானமாக இரண்டு பிரிவுகளைக் கொண்டது. அவற்றில் ஒன்று கடன் அடிப்படையில் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளாகும் என்பதுடன், மற்றைய வகையாக இருப்பது தரமற்ற வீடுகளை தரமான வீடுகளாக மாற்றியமைப்ப வழங்கப்படும் கடனாகும்.





தற்போது கடன் கோப்பு, 1078 வீடமைப்புக் கடன்களையும், 732 தொழில்முயற்சி அபிவிருத்திக் கடன்களையும் உள்ளடக்கியுள்ளது. கருத்திட்டங்களின் வரிசைப்படுத்தலுக்கு அமைய மேலும் 2000 கடன்கள், கடன் கோப்பில் இணைந்துகொள்ளும்.

தொழில்முயற்சிசார் வளங்கள் திட்டமிடல் (நுசீ) முறைமையில் கடன் அறவிட்டுக் கொள்ளும் முறையியல்

இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை நிறுவகத்தின் (ஐஊவுயு) வழிகாட்டல்

தற்போது காணப்படுகின்ற தன்னியக்கமல்லாத முறைக்கு (Manual) பதிலாக ஒன்லையின் முறை ஊடாக கடன் அறவிட்டுக் கொள்ளும் ஆற்றலை மேம்படுத்தல், வீட்டிலிருந்தவாறே வேலை செய்தல் எண்ணக்கரு, ஒன்லையின் அலுவலகம் மற்றும் ‘‘தொலைஇயக்கப் பணி’’ போன்ற அச்சுறுத்தலான நிலைமைகளின் மேற்படி முறைகளிலிருந்து பயன்பெறுவதற்கு (கொவிட் 19 போன்ற தொற்று நோய் நிலைமைகளில்) மற்றும் கடன் விபரத்துக்கு உரிய தரப்பினர்கள் பிரவேசிப்பதை வளர்ப்பதற்கு நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவத்தினால் உத்தேசிக்கப்பட்ட வியாபார வளங்கள் திட்டமிடல் முறைமையுடன் (ERP) ஒன்லையின் கடன் அறவிட்டுக் கொள்ளும் முறையை அறிமுகம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

முதலில், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை நிறுவகத்துடன் (ஐஊவுயு) கலந்துரையாடப்பட்டது, அரசின் தேசிய டிஜிரல்மயமலக்கலின் ஆரம்பத்துக்கா (யேவழையெட னுபைவையட ஐவைையவளைந) தாபிக்கப்பட்டுள்ள அதன் ஒழுங்குவிதிகளுக்கு அமைய செயற்படுவதற்காகும். சாத்தியக்கூறு கற்கையை மேற்கொண்ட பின்னர் தகுந்த மென்பொருள் தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கு ஐஊவுயு ஆலோசனை வழங்கியது. தற்போது பெறுகை செயன்முறை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதிகாரசபைக்கு புதிய போக்குவரத்து மற்றும் பராமரிப்புப் பிரிவை ஏற்படுத்தல்

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் முன்னேற்றம் மற்றும் இலக்குகளை அடைந்துகொள்வதற்காக கடமைகளை வழிநடாத்தி முறையான கட்டுப்பாட்டு முறைமையை தயார் செய்துகொள்ளல் மற்றும் அதிகாரசபையின் வினைத்திறனை மேம்படுத்திக் கொள்வதற்காக மென்மேலும் விளைதிறன்மிக்க சேவையை ஆற்றுதல் ஆகிய அபிலாசைகளை அடிப்படையாகக் கொண்டு நிருவாகப் பிரிவு இரண்டு பகுதிகளாக அதாவது, நிருவாகப் (மனித வள அபிவிருத்தி) பிரிவு மற்றும் நிருவாகப் (போக்குவரத்து மற்றும் பராமரிப்பு) பிரிவு என்ற வகையில் மீளமைக்கப்பட்டது.

இவ்வனைத்துப் பணிகளையும் வெற்றிகரமாகவும், துரிதமாகவும் நிறைவேற்றிக் கொள்வதற்கு போக்குவரத்து வசதிகளை பெற்றுக் கொடுத்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் நிருவாகப் (போக்குவரத்து மற்றும் பராமரிப்பு) பிரிவினால் மேற்கொள்ளப்படும்.

இதன் ஒழுங்கமைப்பானது பிரதிப் பணிப்பாளர் நிருவாகம் (போக்குவரத்து மற்றும் பராமரிப்பு) உள்ளிட்ட பதவியணி அலுவலர்கள் மூவரையும், சாரதிகள் பத்துப் பேரையும் கொண்டதாக உள்ளது. நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் போக்குவரத்து மற்றும் பராமரிப்புப் பிரிவு 10 வாகனங்களைக் கொண்டுள்ளதுடன், இது நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான 06 வாகனங்கள் மற்றும் செயற்பாட்டு குத்தகை முறையில் பெற்றுக் கொள்ளப்பட்ட 04 வாகனங்களைக் கொண்டதாகும். இந்த 10 வாகனங்களில் பதவி நிலை அலுவலர்களுக்கு போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான 05 வாகனங்களை சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், எஞ்சிய 05 வாகனங்களும் சகல பிரிவுகளினதும் கடமை நடவடிக்கைகளுக்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அதிகாரசபையின் போக்குவரத்து மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்காக தாபிக்கப்பட்டுள்ள இப்பிரிவின் வெற்றிகரமான தன்மையை வெளிப்படுத்தும் வகையில் பிரிவினால் அதிகாரசபையின் போக்குவரத்து மற்றும் பராமரிப்பு பணிகளை துரிதமாகவும், வினைத்திறன்மிக்கதாகவும் மேற்கொள்வதற்காக புதிய விண்ணப்ப முறையியல் அறிமுமக் செய்யப்பட்டுள்ளது. அதாவது போக்குவரத்து மற்றும் பராமரிப்புப் பிரிவினால் இதற்கு முன்னர் பயன்படுத்தப்பட்ட வாகன விண்ணப்பத்திற்குப் பதிலாக முறையான புதிய விண்ணப்பப்படிவ முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.



அதிகாரசபையினால் 16 மாவட்டங்கள் முழுவதிலும் மேற்கொள்ளப்படுகின்ற நகரக் குறைந்த வருமானம் பெறும் மக்களை கட்டியெழுப்புவதற்கான மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கும், வேறு நிருவாக ரீதியான நடவடிக்கைகளுக்கும் போக்குவரத்து வசதிகளை பெற்றுக் கொடுப்பதை முகாமைத்துவம் செய்துகொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் இப்பிரிவினால் வாடகை வாகனங்களைப் பயன்படுத்துவதற்கான முறையான முறையியலை அறிமுகம் செய்தமை.

மேலும் போக்குவரத்து மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காக தனியான சில்லறைக் காசுக் கட்டுநிதி பெற்றுக் கொள்ளப்படுவதுடன், அதற்கான விண்ணப்பத்தை அறிமுகம் செய்தமை.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள புதிய முறையியல்களின் மூலம் கடமை நடவடிக்கைகளை இலகுவாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் நிறைவேற்றிக் கொள்ளல் மற்றும் அதிகாரசபை அமுல்படுத்துகின்ற சகல நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் வினைதிறன்மிக்கவாறும், விளைதிறன்மிக்கவாறும் போக்குவரத்து வசதிகளை பெற்றுக் கொடுப்பது மற்றும் பிரிவுகளில் காணப்படுகின்ற பராமரிப்பு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வதற்கும் இப்பிரிவைத் தாபித்ததன் மூலம் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

அதிகாரசபைக்கு புதிய தகவல் தொழில்நுட்ப மற்றும் ஊடகப் பிரிவை ஏற்படுத்தல்

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் முன்னேற்றம் மற்றும் இலக்குகளை அடைந்துகொள்வதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றி பொது மக்கள் மிக வேகமாக தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் மென்மேலும் வினைத்திறன்மிக்க, இற்றைப்படுத்தப்பட்ட தகவல் தொழில்நுட்ப முறைமையை நிறுவனத்தில் கட்டியெழுப்பல் மற்றும் பேணிவருதல் ஆகிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தகவல் தொழில்நுட்ப மற்றும் ஊடகப் பிரிவு கட்டியெழுப்பப்படுவதுடன், இப்பிரிவானது, பிரிவுத் தலைவர் மற்றும் அலுவலர்கள் மூன்று பேரை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. அதற்கமைய இப்பிரிவின் குறிக்கோல்கள் மற்றும் செயற்பணி பின்வருமாறாகும்.

1. தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஊடக அலகை தாபிப்பதன் குறிக்கோல்கள்

1.1 குறிக்கோல்கள் (ஊடக அலகு)

1. பொது மக்களுக்கு மென்மேலும் வேகமாக தகவல் கிடைக்கக்கூடியவாறு தகவல்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் மனங்கவர் அடிப்படையில் ஒழுங்குபடுத்தல்.

2. நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுகின்ற தேசிய ரீதியில் முக்கியத்துவம்வாய்ந்த சகல அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் ஏனைய விசேட கருத்திட்டங்கள் பற்றி பொது மக்களை விழிப்புணர்வூட்டல்

3. நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பணிகள் தொடர்பில் ஏனைய அரச நிறுவனங்கள், அரசசார்பற்ற அமைப்புக்கள் மற்றும் சமுதாய அமைப்புக்களினால் மேற்கொள்ளப்படுகின்ற விசேட கருத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் பற்றிய பொது மக்களை விழிப்புணர்வூட்டல்.

4. நிறுவனத்திற்குள் சரியான முறையில் தரவு மற்றும் தகவல் வியாபிக்கும் வகையில் ஊடகம் மற்றும் தகவல் தொழில்நுட்ப கலாசாரத்தைக் கட்டியெழுப்புதல்.

5. மேலுள்ள பணிகளை அமுல்படுத்துவதற்கு நிறுவனம் மற்றும் அலகினுள் பௌதீக மற்றும் மனிதவளத்தை அபிவிருத்தி செய்தல்.

1.2 குறிக்கோள்கள் (தகவல் தொழில்நுட்பம்)

1) வினைத்திறன்மிக்க மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட தகவல் முறைமை (னுயவயடியளந) நிறுவனத்தில் கட்டியெழுப்பப்படுவதல் மற்றும் பேணிவரப்படுதல்.

2) நிறுவனத்தின் சகல பிரிவுகளையும் ஒருங்கிணைப்புச் செய்யும் வகையில் தகவல் முறைமையை கட்டியெழுப்புதல்.

3) நிறுவனத்தின் உள்ளக பதவியணியின் தகவல் தொழில்நுட்ப அறிவை வளர்த்தல் மற்றும் இற்றைப்படுத்தல்.

4) நிறுவனத்தின் சகல செயற்பாட்டு நடவடிக்கைகளையும் தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் மேற்கொள்ளல் மற்றும் மென்மேலும் புதுப்பிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது பற்றிய கலாசாரத்தை நிறுவனத்தில் தாபித்தல்.

இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களை புதிய தொழில்நுட்பத்தின் ஊடாக முறையாக புதுப்பொழிவுடன் மேற்கொள்வதற்கும், நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற தேசிய நிகழ்ச்சித்திட்டங்களை மிகவும் வேகமாக பொது மக்களைச் சென்றடையச் செய்வதற்கும் இப்பிரிவு பங்களிப்பு வழங்கியுள்ளது.

மாதாந்த தர்மப்போதனை நிகழ்ச்சித்திட்டம்

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பதவியணியினரை வேளைப்பளுவிலிருந்து விடுவித்து ஆன்மீக அம்சங்களின் மூலம் அவர்களைப் போசிப்பதற்காக தர்ம போதனை நடாத்துவதற்கு சங்கைக்குரிய பிக்கு ஒருவரை அதிகாரசபைக்கு வரவழைத்து ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்திற்கு முன்னைய நாளன்று தர்மப் போதனை நிகழ்ச்சியொன்று ஒழுங்கு செய்யப்பட்டு வருகின்றது.

அதற்கமைய நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் ஒவ்வொரு பிரிவினாலும் அவர்களுக்குரிய மாதத்தில் தர்மப் போதனை ஒழுங்கு செய்யப்படுவதுடன், தர்மப்போதனையை செவிமடுக்க அதிகாரசபையின் சகல ஊழியர்களுக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் பிரிவுகளுக்கு இடையிலான தொடர்புகளையும் வளர்த்துக் கொள்ள வழிபிறந்துள்ளது.

அதிகாரசபையின் அலுவலர்கள் வெளி உலகிலிருந்து விடுபட்டு உளவியல் நலனுக்காக ஆன்மீக வாழ்க்கையின் நற்பண்புகளை வளர்த்துக் கொள்ள இந்த மாதாந்த தர்மப் போதனை நிகழ்ச்சித்திட்டம் காரணமாக அமையும்.









அதிகாரசபையின் வினைத்திறனை உச்சளவில் பேணிவருவதற்காக வெற்றிடமாகக் காணப்பட்ட பதவியணியை ஆட்சேர்ப்புச் செய்தல்.

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நடவடிக்கைகளை வினைத்திறனும், விளைதிறனும்மிக்கவாறு மேற்கொள்வதற்காக நீண்டகாலமாக வெற்றிடமாகக் காணப்பட்ட பதவிகளை நிரப்புவதற்கு நிரந்தர அடிப்படையில் புதிய பதவியணியை ஆட்சேர்ப்புச் செய்வது 2021 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.

பின்வரும் பதவிகளின் வெற்றிடங்களுக்கு 2021 ஆம் ஆண்டு யூலை மற்றும் டிசம்பர் மாதங்களில் ஆட்சேர்ப்பு மற்றும் உள்ளக பதவி உயர்வுகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சூ	பதவி	வெற்றிடம்
1	உதவிப் பணிப்பாளர் (காணி)	01
2	உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி)	01
3	அபிவிருத்தி அலுவலர்	02
4	தரவு நிரற்படுத்தும் உதவியாளர்	01
5	திட்டமிடல் உதவியாளர்	01
6	சமுதாய அபிவிருத்தி உதவியாளர்	12
7	தொழில்நுட்ப உதவியாளர்	02
8	சமூக அபிவிருத்தி உதவியாளர்	13
9	முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சாரா)	06

#	பதவி	சம்பளத் தொகுதி	அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை		தற்போதுள்ள எண்ணிக்கை		வெற்றிடம்	மிகை
			நிரந்தர	ஒப்பந்த	நிரந்தர	ஒப்பந்த		
01	பணிப்பாளர் நாயகம்	HM2-1	01	-	01	-	-	-
02	பணிப்பாளர் (சமூக திரட்டல்)	HM1-1	01	-	01	-	-	-
03	பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் தகவல் தொழில்நுட்பம்)	HM1-1	01	-	01	-	-	-
04	பணிப்பாளர் (நிதி)	HM1-1	01	-	01	-	-	-
05	பணிப்பாளர் (பொறியியல்)	HM1-1	01	-	-	-	01	-
06	உள்ளகக் கணக்காய்வாளர்	MM1-1	01	-	01	-	-	-
07	உதவிப் பணிப்பாளர் (நிதி)	MM1-1	01	-	01	-	-	-
08	உதவிப் பணிப்பாளர் (பெறுகை)	MM1-1	01	-	01	-	-	-
09	உதவிப் பணிப்பாளர் (பொறியியல்)	MM1-1	01	-	01	-	-	-
10	உதவிப் பணிப்பாளர் (கட்டிடக் கலை)	MM1-1	01	-	01	-	-	-
11	உதவிப் பணிப்பாளர் (சமூக திரட்டல்)	MM1-1	03	-	03	-	-	-
12	உதவிப் பணிப்பாளர் (சட்டம்)	MM1-1	01	-	01	-	-	-
13	உதவிப் பணிப்பாளர் (காணி)	MM1-1	01	-	-	-	01	-
14	உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி)	MM1-1	01	-	-	-	01	-
15	உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்)	MM1-1	01	-	01	-	-	-
16	நிருவாக அலுவலர்	JM1-1	01	-	01	-	-	-
17	தொழில்நுட்ப அலுவலர்	JM1-1	01	-	01	-	-	-
18	பொறியியல் உதவியாளர்	JM1-1	01	-	-	-	01	-
19	அபிவிருத்தி அலுவலர்	MA5-1	08	-	08	-	-	-
20	முறைமைப் பகுப்பாய்வாளர்	MA5-1	01	-	01	-	-	-
21	திட்டமிடல் உதவியாளர்	MA5-1	01	-	01	-	-	-
22	தரவுத் திட்டமிடல் உதவியாளர்	MA5-1	01	-	01	-	-	-
23	திட்டமிடல் உதவியாளர் (த.தொ.)	MA5-1	01	-	01	-	-	-
24	திட்டமிடல் உதவியாளர் (ஆராய்ச்சி)	MA5-1	01	-	01	-	-	-
25	திட்டமிடல் உதவியாளர் (புள்ளிவிபரம்)	MA5-1	01	-	01	-	-	-
26	சட்ட உதவியாளர்	MA3	01	-	01	-	-	-
27	சமுதாய அபிவிருத்தி உதவியாளர்	MA3	30	-	21	-	09	-
28	தொழில்நுட்ப உதவியாளர்	MA2-1	13	-	10	-	03	-
29	திட்டமிடல் கலைஞர்	MA2-1	01	-	01	-	-	-
30	செய்நிரற்படுத்துபவர்	MA2-1	01	-	01	-	-	-
31	முகாமைத்துவ உதவியாளர் (த.தொ.)	MA1-1	27	-	26	-	01	-
32	தரவுப் பதிவு இயக்குனர்	MA1-1	02	-	01	-	01	-
33	சமூக அபிவிருத்தி உதவியாளர்	MA1-1	20	-	19	-	01	-

34	சாரதி	PL3	10	-	10	-	-	-
35	நிர்மாண கண்காணிப்பு உதவியாளர் (ஒப்பந்த)	PL3	-	16	-	-	16	-
36	அலுவலக சிற்றூழியர்	PL1	12	-	10	-	02	-
37	ஆவணக் காப்பாளர்	PL1	01	-	-	-	01	-
38	களஞ்சியப் பொறுப்பு உதவியாளர்	PL1	01	-	01	-	-	-
39	சுற்றுலா விடுதி பொறுப்பாளர்/ காவலாளி (ஒப்பந்த)		-	-	-	-	-	01
	மொத்தம்		**153**	**16**	**131**	**0**	**38**	**01**
உத்தேச நடுத்தர வருமான வீடமைப்புக் கருத்திட்டத்திற்கு								
40	பணிப்பாளர் (நடுத்தர வருமான வீடமைப்புக் கருத்திட்டம்)	-	-	01	-	-	01	-
41	பிரதி.உதவிப் பணிப்பாளர் (ஒப்பந்த நிருவாகம்)	-	-	01	-	-	01	-
42	கனிய அளவையாளர்	-	-	01	-	01	-	-
43	தொழில்நுட்ப அலுவலர் (நகரத் திட்டமிடல் கலைஞர்)	-	-	02	-	-	02	-
44	கனிஷ்ட கனிய அளவையாளர்	-	-	02	-	-	02	-
45	காணிகள் அலுவலர்	-	-	01	-	-	01	-
46	தொழில்நுட்ப அலுவலர் (திட்டமிடல் கலைஞர்)	-	-	01	-	-	01	-
47	மேலதிக பணிப்பாளர் (தொழில்நுட்பம்)	-	-	01	-	-	01	-
48	கட்டிடக் கலைஞர்	-	-	01	-	-	01	-
49	பொறியியலாளர் (சிவில்/மின்/சேவை)	-	-	02	-	-	02	-
	மொத்தம்		**-**	**13**	**-**	**01**	**12**	**-**
	முழு மொத்தம்		**153**	**29**	**131**	**01**	**50**	**01**

- **மொத்த பதவியணியினர் = 131 (தவிசாளர் இன்றி)**

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை
2021-12-31 ஆம் திகதியில் இருந்தவாறு
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	2021	2020
சொத்துக்கள்	-	ரூ.	ரூ.
நடைமுறைச் சொத்துக்கள்			
காசு மற்றும் வங்கி மீதி	01	56,179,922.48	48,644,361.79
காசு முற்பணம்	02	322,086.32	56,050.50
உற்சவ முற்பணம்		33,750.00	20,000.00
எரிபொருள் முற்பணம்		354,980.00	354,980.00
ஊழியர் கடன்		1,935,848.55	4,991,778.08
ஊழியர் இடர் கடன்		8,740,266.91	12,096,737.39
நலன்புரிக் கடன்		10,000.00	10,000.00
கல்விக் கடன்		125,383.77	187,375.17
கிடைக்க வேண்டிய சேவைக் கட்டணங்கள் - நகர அபிவிருத்தி அதிகாரசபை		207,331,767.00	207,331,767.00
கிடைக்க வேண்டிய கடன் - விசிறி கடன்		6,047,908.85	6,472,020.26
கிடைக்க வேண்டிய கணக்குகள்	03	442,935,419.06	178,386,457.28
ஒப்பந்த முற்பணம்	04	1,323,113.95	3,470,278.62
நடமாடும் வண்டி இருப்பு		41,000.00	
இருப்பு வள நிலையம்	05	687,105.50	687,105.50
சிலாபம் வீடமைப்புக் கருத்திட்டம்		25,804,236.85	25,804,236.85
தலவாக்கலை வீடமைப்புக் கருத்திட்டம்		10,280,321.40	11,565,361.57
அநுராதபுரம் (துருஇத்துருகம) வீடமைப்பு இருப்பு		2,451,601.27	2,451,601.27
48 வத்த வீடமைப்பு இருப்பு		36,625,000.00	36,625,000.00
சஹஸ்புர வர்த்தக அலகுகள்		44,777,000.00	-
லுனாவ வீடமைப்பு அலகு இருப்பு (180 அலகுகள்)		651,016,306.14	-
லுனாவ வீடமைப்புக் கருத்திட்டம் இருப்பு	06	94,611,202.05	-

		1,591,634,220.10	**539,155,111.28**
முதலீடுகள்	**07**	**916,500,000.00**	-
நடைமுறையல்லா சொத்துக்கள்			
கடன் இருப்பு (கடன்பட்டோர்)	**08**	429,042,347.01	452,413,775.47
மேற்கொண்டு வரும் வேலைகள்	**09**	13,221,994.17	1,275,884,524.44
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	**10**	51,107,430.91	63,229,215.42
அருவைச் சொத்துக்கள்			
கணக்கீட்டு மென்பொருள்		500,000.00	500,000.00
		493,871,772.09	**1,792,027,515.33**
மொத்த சொத்துக்கள்		**3,002,005,992.19**	**2,331,182,626.61**
பொறுப்புக்கள்			
நடைமுறைப் பொறுப்புக்கள்			
அட்டுறு செலவினம்	**11**	112,830,040.83	37,588,544.50
முகாமைத்துவக் கூட்டுத்தாபன நிதியம் - அங்குலான		30,000.00	-
முகாமைத்துவக் கூட்டுத்தாபன நிதியம் - லுனாவ		21,900,000.00	
முகாமைத்துவக் கூட்டுத்தாபன நிதியம் - சிங்ஹபுர		2,671,854.45	
முகாமைத்துவக் கூட்டுத்தாபன நிதியம் - வதுல்லவத்த அங்குலான நீர்க் கட்டணம் சேகரிப்பு		1,780,000.00 -	-
தடுத்துவைக்கப்பட்ட நிதி	**12**	305,822.60	1,344,641.65
செலுத்த வேண்டிய கணக்கு – ரீல் கம்பனி		-	7,107,859.84
விசிறி வீடமைப்புக் கடன் - முற்பணமாகப் பெற்ற தவணைப்பணம்		-	141,957.79
துருஇத்துருகம - முற்பணமாகப் பெற்ற தவணைப்பணம்		-	181,902.50
தலவாக்கலை - முற்பணமாகப் பெற்ற தவணைப்பணம்		15,000.00	
சஹஸ்புர - முற்பணமாகப் பெற்ற தவணைப்பணம்		-	12,794.39

சிலாபம் - முற்பணமாகப் பெற்ற தவணைப்பணம்		86,346.28	76,224.14
ஹம்பாந்தோட்டை துப்பரவேற்பாட்டு வசதிகள் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்		4,514,970.13	4,514,970.13
Lunawa Down Payment Recovery		140,605,000.00	
திருப்பிச் செலுத்தக்கூடிய கேள்வி வைப்பு		10,000.00	
பிற்போடப்பட்ட வருமான கொடை (லுனாவ)		751,106,192.09	
திறைசேரிக்கு செலுத்த வேண்டியது		125,016,000.00	
		1,160,871,226.38	**50,968,894.94**
நடைமுறையல்லாத பொறுப்புக்கள்			
பணிக்கொடை ஒதுக்கம்		25,147,323.00	21,332,285.50
இடர் கடனுக்கான ஒதுக்கம்		15,000,000.00	5,694,754.65
		40,147,323.00	**27,027,040.15**
மொத்த பொறுப்புக்கள்		**1,201,018,549.38**	**77,995,935.09**
தேறிய சொத்துக்கள்		**1,800,987,442.81**	**2,253,186,691.52**
-			
